GOKULAM

கோகுலம்

மார்ச் 2005


ரூ.6/-



அதிக மார்க் வாங்குவது எப்படி?

- ரமேஷ் பிரபா டிப்ஸ்

சாதனை சானியா!



வண்ணம் தீட்டுங்கள்!

கோகுலம்

(கல்கி திருவள வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : **24 யுஎஸ். டாலர்**
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

மார்ச் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 2



அன்புள்ள உங்களுக்கு...

வெற்றி உங்களுக்கே!



கோகுலம் பிறந்த தினத்துக்காக செஞ்சியில் உள்ள சாரதா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் பல விதமான வாழ்த்து அட்டைகளை அனுப்பியிருந்தனர். அத்தனை பேருக்கும் நன்றி.

வணக்கம்.

வடிவம் மாறிய முதல் இதழைத் தங்களிடம் அனுப்பி விட்டு, உங்களின் விருப்பத்தை அறிய ஆவலுடன் காத்திருந்தோம். ஏராளமானவர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்து இன்னும் கூட எழுதியபடியே இருக்கிறார்கள். இந்தக் கடிதங்களின் மூலம் நாங்கள் உங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள முடிந்தது. அத்தனை பேரும் கோகுலத்தின் புதிய வடிவத்தையும் புதிய பகுதிகளையும் பாராட்டி எழுதியிருந்தது எங்களை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது. நன்றி!

பரீட்சை நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பரீட்சையில் அதிக மார்க் வாங்குவது எப்படி என்று இந்த இதழில் பலரும் கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். பரீட்சையின்போது மட்டும் விழுந்து விழுந்து படிக்காமல் முன்கூட்டியே தயாரானால் பரீட்சை ரொம்பவும் சுலபமாக இருக்கும். அதேநேரம் பரீட்சைக்காக எப்பொழுதும் தன்னை வருத்திக் கொண்டு, உறங்காமல், சாப்பிடாமல் படிப்பதும் தவறு. உறங்கும் நேரத்தில் உறங்கி, படிக்கும் நேரத்தில் படித்து தன்னம்பிக்கையுடன் பரீட்சை எழுதுங்கள். வெற்றி உங்களுக்கே!

வாழ்த்துகளுடன்,
தம்பிப்பயல்



யார் அந்தப் பிரபலம்?

ஒரு குறிப்பிட்ட சாதனையாளரைப் பற்றிய குறிப்புகளின் அணிவகுப்பு இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. முதல் குறிப்பைக் கொண்டே கண்டுபிடித்து விட்டால் 8 மதிப்பெண்கள். ஒவ்வொரு அதிகப்படி குறிப்புக்கும் ஒரு மதிப்பெண் குறைவு.

பரிசு ஜோக்ஸ்

''நான் பஸ்ஸிலே ஏறின வுடனேயே தூக்கம் தூக்கமாக வருது டாக்டர்.''

''வந்தா என்ன? கண்ணை மூடி தூங்க வேண்டியதுதானே!''

''நான் தூங்கிட்டா பஸ்ஸை யாரு ஓட்டறது?''

- இந்திரா,
ஒன்பதாம் வகுப்பு,
ஜெயகோபால் கரோடியா
நேஷனல் மேல்நிலைப்
பள்ளி, சென்னை





''உங்க வீட்ல இருக்கிற ஓடாத கடி காரம் சரியான நேரத்தையும் காட்டும்னு சொல்றியே, எப்படிடா?''

''பகல்ல ஒரு தடவை, ராத்திரியில ஒரு தடவை காட்டும்!''

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

ஓடாத கடிகாரம் சரியான நேரம் காட்டும்!

''நேத்து ராத்திரி உன் ரூம்ல விளக்கே எரியலையே, ஆனா படிச்சேங்கறே?''

''படிக்கிற இன்ட்ரஸ்ட்ல அதையெல்லாம் கவனிக்கவே இல்லை!''

- பா. விஜயசாரதி, திருப்பதி





''ராஜு, 1869ல் நடந்த ஒரு முக்கிய நிகழ்ச்சி சொல்லு?''

''காந்திஜி பிறந்த வருடம் டீச்சர்.''

''1872 ம் வருடத்தில் என்ன நடந்தது?''

''காந்திஜிக்கு மூன்று வயது நடந்தது!''

- பு. யூனுஸ், ஆறாம் வகுப்பு,
ஜீவனா பள்ளி, மதுரை



சிவப்புக் கல் இளவரசன்!

பாரசீக நாட்டில் ஓர் ஏழை நதிக் கரை வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது சிவப்பு வண்ணத்தில் ஒரு பளபளப்பான கல்லைக் கண்டான். அதனுடைய பளபளப்பு அவனை வியக்க வைத்தது. இவன் சிவப்புக் கல் வைத்திருப்பதைக் கூற, பக்கத்து வீட்டுக்காரன் அதை அந்நாட்டு அரசனிடம் கொடுத்தால், அவர் மகிழ்ந்து போவார் என்று கூறினான். ஏழையும் மறுநாள் அந்நாட்டு மன்னனிடம் அதைக் கொடுக்க, மன்னன் அந்தக் கல்லின் பளபளப்பில் வியந்து ''ஒரு பை நிறையத் தங்கக் காசுகள் இதற்குப் பரிசாக நான் தருகிறேன்'' என்று கொடுத்தான்.

மன்னன் அந்தச் சிவப்புக் கல்லை தன் செல்ல மகளிடம் காட்டினான். அவளுடைய பிறந்த நாளுக்கு அதைப் பரிசாகத் தருவதாகக் கூறி ஓர் அலமாரியில் பத்திரமாகப் பூட்டி வைத்தான். சில நாட்கள் கழித்து மன்னனின் மகள் பிறந்த நாள் வந்தது. மன்னன் சிவப்புக் கல்லை எடுப்பதற்காக

ஜி.இந்திரா

அலமாரியைத் திறக்க அங்கு சிவப்புக் கல்லிற்குப் பதில் ஓர் அழகான இளைஞன் இருந்தான். மன்னனுக்குத் திகைப்பும் கோபமும் ஏற்பட்டது. "நீ யார்? எங்கிருந்து வருகிறாய், ஏன் இங்கு இருக்கிறாய்?" என்று வினவினான்.

"மன்னா, நீங்கள் அதிர்ச்சி அடைவது புரிகிறது. நான் யார் என்று இப்போது சொல்லக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் உங்களுக்கு அடிமையாக நான் எல்லா வேலைகளையும் செய்வேன்" என்றான் இளைஞன். இப்படியாக பல மாதங்கள் இளைஞன் மன்னனுக்கு ஊழியம் செய்து வந்தான்.



ஒரு நாள் இரவு பெரிய சத்தம் கேட்டது. மரம் வீழ்ந்து, வீடுகள் நொறுங்கி, மக்கள் கூக்குரல் போடுவது போல் சத்தம் கேட்டது. மன்னன் திடுக்கிட்டு எழுந்து, ஒரு பெரிய ராட்சத மிருகம் மக்களை அடித்துக் கொன்று, தின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். பயந்து போன அரசன் இந்த ராட்சத மிருகத்தை யார் கொல்கிறார்களோ அவர்களுக்கு நல்ல பரிசு தருவேன் என்று அறிவித்தான். பல இளைஞர்கள் போராடி இறந்து விட்டார்கள். மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். மன்னன் "இந்த மிருகத்தைக் கொல்பவனுக்கு என்

ராஜ்யத்தில் பாதியும் என் மகளைத் திருமணமும் செய்து வைப்பேன்'' என்று அறிவித்தான்.

அப்போது அவனிடம் வேலை செய்த இளைஞன், தான் அதைக் கொல்வதாகக் கூறினான். அதன் அருகே தைரியமாகச் சென்று அதன் தலையை இளைஞன் வெட்டினான். தன் மக்களைக் காப்பாற்றியதற்காக மன்னன் மகிழ்ந்து போய் தன் நாட்டில் பாதியையும் கொடுத்து, மகளையும் திருமணம் செய்து கொள்ளச் சொன்னான். எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

மன்னனின் மகளுக்கோ மிகவும் வியப்பு. இந்த இளைஞன் எங்கிருந்து வந்தான் என்று அறிய ஆசைப்பட்டாள். அதனால் அவனிடம் அதைப் பற்றி நச்சரித்தாள். ''நான் எங்கிருந்து வந்தேன் என்பதைக் கூறினால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும்'' என்று இளைஞன் கூற இளவரசியோ உண்மையைக் கூறும்படி அடிக்கடி நச்சரித்தாள். இளைஞன் கூற ஆரம்பிக்கும் போது ஒரு பெருங்காற்றடித்து காணாமல் போனான். இளவரசி வருத்தப்பட்டாள். நாடு முழுவதும் கண்ணீர் விட்டனர். மன்னனுக்கு கவலையாகி விட்டது. ஒரு நாள் வேலைக்காரி ஓடி வந்து ''மன்னா, நம் இளவரசரைக் கண்டேன். நதிக்கரையில் ஆயிரக்கணக்கான சிறிய தேவதைகள் இருந்தன. அவை நதியை மலர்கள் போட்டு மூடின. பிறகு ஓர் இளைஞன் நடனம் ஆடினான். அவனுடைய தலையில் சிவப்புக் கல் இருந்தது. அவன் தான் இளவரசன்'' என்றாள்.

மறுநாள் மன்னனின் மகளும் வேலைக்காரியும் நதியின் பக்கமாகச் சென்று ஒரு மரத்தின் பின் ஒளிந்து கொண்டனர். நடு இரவில் நதியில் வெளிச்சம் ஏற்பட்டது. ஒரு வயதானவர், நீண்ட வெள்ளை தாடியுடனும் தங்க உடைகளுடனும் தோன்றினார். அவருக்குப் பக்கத்தில் ஒரு சிம்மா

யார் அந்தப் பிரபலம்?



இவரது மகன் துப்பாக்கி சுடும் போட்டியில் வல்லவர்.

சனத்தில் இளவரசியின் கணவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். உடனே இளவரசி தன் முகத்தைத் திரையில் மூடிக்கொண்டு நடனம் ஆட ஆரம்பித்தாள்.

அவளுடைய நளினமான நடனம் அங்கு எல்லோரையும் வியக்க வைத்தது. எல்லோரும் கைதட்டினர். வயதானவர் தன் குரலை உயர்த்தி "உன் நடனம் மிகச் சிறப்பாக இருந்தது. உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார். உடனே இளவரசி தன் முகத்திரையை விலக்கி "என்னுடைய கணவன் எனக்கு வேண்டும்" என்றாள். "நீரின் அரசனான நான் உன் வாக்கைக் காப்பாற்றுகிறேன். உன் கணவனை எடுத்துக் கொள். சிவப்புக்கல் இளவரசனான இவனை நீ எப்படி தொலைத்தாய் என்பதை மட்டும் மறக்காதே. இனி வருங் காலத்தில் புத்திசாலியாக நடந்து கொள்" என்று அரசன் கூறினான். நதியிலிருந்து இளவரசனும், இளவரசியும் நதிக்கரையில் விடப்பட்டார்கள். இருவரும் பிறகு வெகு காலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

சூரியனில் ஆராய்ச்சி!





- ஜெ.ம. சதீஷ்குமார்,
பத்தாம் வகுப்பு,
சிவகாசி அரிமா மெட்ரிக் பள்ளி,
சிவகாசி

தத்தூத் தவளையின் சாமர்த்தியம்!

கதை: ஆர். சாரதா, சென்னை. படம்: பிள்ளை




கொக்கு தத்தூத்தை விட்டுவிட்டு, மீன்களை நோக்கிச் சென்றது.
சில நாட்கள் கழித்து தரையில் சென்று கொண்டிருந்த தத்தூத் ஒரு பருந்திடம் மாட்டிக் கொண்டது.
தரையில் வாழும் எலியைப் போல் நான் ருசியானவன் இல்லை. தண்ணீரில் ஊறி சொத சொதவென்று இருப்பேன்.
உன்னைத் தரையில் பார்த்திருக் கிறேனே?
எனக்கு சைனஸ் பிராப்ளம். தண்ணீரில் அதிகம் இருந்தால் தலைவலி வந்துவிடும். அதற்காக தரைக்கு வருவேன். அங்கே கொழுத்த எலி ஒன்று உள்ளது.
பருந்தும் தத்தூத்தை விட்டு விட்டு எலிப் பொந்து நோக்கிச் சென்றது.
மறுநாள் தத்தூத் பாம்பின் நிழலில் இளைப்பாறியது. பாம்பு தத்தூத்தைப் பிடித்தது.
பாம்பண்ணா, நான்...


உஷ்... என்னிடம் உன் ஜம்பம் பலிக்காது. நீ தண்ணீரில் இருந்தாலும் தரையில் இருந்தாலும் நான் சாப்பிடுவேன்.
தலை வாழை இலை போட்டு விருந்தே இருக்கும்போது என்னைப் போய்ச் சாப்பிடறேன் என்கிறாயே!
என்ன சொல்றே?
அதோ அந்தத் தேன்கூடுகளில் ஒரு காலி கூடு உள்ளது. அதில் 50 தவளைகள் ஒளிந்திருக்கின்றன. போய்ச் சாப்பிடு.
சரி, வரேன்.
பாம்பு கூட்டுக்குள் தலையை விட்டது. அடுத்த நொடி -
ஆ....ஐயோ... ராட்சத தேனீக்கள்.
தப்பித்த மகிழ்ச்சியில் தத்தூத் தண்ணீருக்குள் குதித்தது.



ரத்த அழுத்தத்தைக் கண்காணிக்கும் வாட்ச்!

நோயாளிக்கு வலியையோ, இடையூறோ அளிக்காமல் 24 மணி நேரமும் ரத்த அழுத்தத்தை கண்காணிக்கும் கைக்கடிகாரத்தை சிங்கப்பூரின் மருத்துவ நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறது. இந்த வாட்சின் அடியில் 'சென்சார்' எனப்படும் உணர்கருவி பொருத்தப்பட்டிருக்கிறது. இது இடைவிடாமல் ரத்த அழுத்தத்தை உணர்ந்து, ரத்த அழுத்தம் கூடுகிறதா, குறைகிறதா என்பதை கவனித்துத் தகவல் அளித்துக் கொண்டே இருக்கும். இதன் மூலம் நோயாளியின் தன்மையை மருத்துவர் நன்றாக அறிந்து சிகிச்சை அளிக்க முடியும். இந்த வாட்சை கண்டுபிடித்தவர் டாக்டர் டிங் சூன் மெங்.

ளனர்.

கொரில்லா போராளிகளாலும் ராணுவங்களாலும் மண்ணில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்ணிவெடிகளை அப்புறப்படுத்தும் பணியில் மெட்டல் டிடெக்டர் கருவி, மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. தற்போது ஆப்பிரிக்காவின் ராட்சத எலிகளும் இப்பணியில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த எலிகள் ஒவ்வொன்றும் 2.8 கிலோ எடை கொண்டவை. இவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கண்ணிவெடி இருக்கும் இடத்தை அறிந்ததும் எலி மண்ணைப் பிராண்டும். உடனே அங்குள்ள கண்ணி வெடிகள் அகற்றப்படுகின்றன.

உலகிலேயே மிகவும் உயரமான புத்தர் சிலை புத்த கயாவில் 500 அடி உயரத்தில் அமைக்கப்பட உள்ளது. 17 மாடி உயரம் கொண்ட இந்த வெண்கலச் சிலை 1000 ஆண்டுகள் இருக்கக்கூடியது.

உலகின் மிகப் பெரிய அணையை சீனா கட்டி வருகிறது. யாங்க்ட்ஸீ ஆற்றின் குறுக்கே ஒரு லட்சத்து முப்பது ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகிறது இந்த அணை. இதன் காரணமாக இப் பகுதியில் குடியிருந்த 10 லட்சம் மக்கள் வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்துள்



காற்று மாசுபாடு

"காற்று அதிகமாக வீசி, தோட்டமெல்லாம் ஒரே குப்பையா இருக்கு. நீலா, தீப்பெட்டி கொண்டு வா. குப்பையை எரிச்சுடறேன்" என்றார் பாட்டி.

நீலா தீப்பெட்டி கொடுக்க, பாட்டி குப்பையை எரித்தார். காய்ந்த இலைகள், காகிதம், பிளாஸ்டிக் என அனைத்தும் எரிந்து துர்நாற்றத்தை உருவாக்கின.

உள்ளே பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பா தோட்டத்துக்கு வந்தார். "என்ன பண்ணறீங்க?" என்றார்.

"குப்பையை எரிச்சேன்" என்றார் பாட்டி.

"நான்தான் குப்பையை அள்ளிட்டுப் போறதுக்கு ஏற்பாடு செய்திருக்கேனே! எதுக்கு இப்படி எரிக்கறீங்க?"

"குப்பையை எரிச்சதுக்குப் போய் இப்படி கோபப்படறீயே?"

"ஏற்கனவே காற்று மாசுபட்டுள்ளது. இதில் பிளாஸ்டிக், ரப்பர் போன்றவற்றை எரித்தால் இன்னும் அதிகமாக மாசுபாடு அடையாதா? இந்தக் காற்றை சுவாசித்தால் உடல் நலத்துக்கு கேடு. எரியற தீ காற்றுல எங்காவது பற்றிக் கொண்டால் பெரிய விபத்து வேற ஏற்படும்" என்றார் அப்பா விளக்கமாக.

"அப்பா! நாங்க இவ்வளவு விஷயங்களை யோசிக்கவே இல்லை. இனி இப்படி செய்ய வேண்டாம் பாட்டி" என்றாள் நீலா.

பாட்டியும் உணர்ந்து கொண்டார்.



ஸ்ரீ நாராயண குரு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் ஸ்பெஷல்

விருது பெற்ற பள்ளி!



• தலைவர்



• தாளாளர்



• முதல்வர்

ஸ்ரீ நாராயண குரு சென்ட்ரல் ஸ்கூல் எனப் பெயர் சூட்டப்பட்டு, இப்பள்ளி 1985ம் ஆண்டு சரவணைப் பணிக்கர் அவர்களுக்குச் சொந்தமான கட்டடத்தில் தொடங்கப்பட்டது.

5 ஆசிரியர்கள், 2 அலுவலர்கள் மற்றும் 40 மாணவர்கள் அப்போது இருந்தனர். பின்னர் ஈழவர் சமுதாய மக்கள் மற்றும் நாராயண குரு திரு மண மண்டபம் உதவியுடன் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. இன்று பிரி.கே.ஜி முதல் 11-ம் வகுப்பு வரை நடைபெறும் இப்பள்ளியில் 30 ஆசிரியர்கள், 15 ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 610 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். 1995-ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சியைப் பெற்று தமிழகக் கல்வி அமைச்சரிடமிருந்து விருது பெற்று வருகிறது.

மூவாயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்று சிறப்பாக இயங்கி வருகிறது. இப் பள்ளி மாணவர்கள் பலபோட்டிகளில் கலந்து கொண்டு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பரிசுகளைப் பெற்று வருகின்றனர்.

மாணவர்களிடமிருந்து நன்கொடை எதுவும் பெறப்படாமல்

மிகக் குறைந்த கட்டணத்துடன் கல்விச் சேவை ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது.

இப்பள்ளியினை ச. கோபாலன், ஆர். சித்தாஞ்சன்தாஸ், ஆர். சரவணை போன்றவர்கள் பெரும்பாடுபட்டு வளர்த்தனர். தற்போது இதன் நிர்வாகக் குழுத் தலைவராக பா. இங்கர்சால், செயலர் எம். பொன்னுராஜ், பொருளாளராக ஜி. வைரவதாஸ் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களோடு பள்ளி முதல்வர் கிறிஸ்டி சேவியர் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

உழைத்துப் பார்!

பேசிப் பார் மொழி புரியும்
பழகிப் பார் குணம் தெரியும்
கொடுத்துப் பார் புகழ் பரவும்
நடந்து பார் பாதை தெரியும்
முயன்று பார் வெற்றி
கிடைக்கும்
உழைத்துப் பார் வாழ்வு
சிறக்கும்.

- டி. சிவா, ஐந்தாம் வகுப்பு

எனக்கும் காட்டு...

பட்டாம் பூச்சியே
எங்கிருந்து
தைத்துக் கொண்டாய்
உன் ஆடைகளை
எனக்கும் காட்டு
அந்தத் தையல்காரனை!

- பி.எல். சிவநிலா,
நான்காம் வகுப்பு

---

1. வட்டமாய் இருக்கும், ஆழமாய் இருக்கும்,
எட்டிப் பார்த்தால் உருவம் தெரியும் - அது என்ன?
2. உடலை உருக்கி வேலை செய்வான்
வெளிச்சத்தையும் கொடுப்பான் - அவன் யார்?
3. உருவத்தைக் காட்டுவான் கண்ணாடி அல்ல;
செய்வதைச் செய்வான் குரங்கும் அல்ல - அது என்ன?

- டி.என். கோசல தேவி, மூன்றாம் வகுப்பு

1. கிணறு, 2. மெழுகுவர்த்தி, 3. நிழல்



"பாட்டி, சந்தைக்கு என்னெல்லாம் கொண்டு போறே?"

"பெட்டிலொட்டியும் சந்தைக்குப் போகுது;
முக்கண்ணனும் சந்தைக்குப் போகுது;
தொப்பிக்காரனும் சந்தைக்குப் போகுது;
வெள்ளைக்காரனும் சந்தைக்குப் போகுது -
அது என்ன?"

-எம்.ஜி. அர்ஜுனன்,
ஐந்தாம் வகுப்பு.

புளி, தேங்காய், பாக்கு, வாழைத்தண்டு



காகம் கறுப்பானது ஏன்?

முன்னொரு காலத்தில் ராம்லால் என்ற ஒரு மீனவன் வாழ்ந்து வந்தான். அவன் சூரியனைத் தன் குலதெய்வமாக நினைத்து தினமும் பூஜை செய்வான்.

ஒருநாள் சூரியன் ராம்லாலுக்குப் பரிசு அளிக்க விரும்பினான். அவன் ஒரு தங்க மோதிரத்தைக் காகத்திடம் கொடுத்து ராம்லாலிடம் கொடுக்குமாறு அனுப்பி வைத்தான். அக் காலத்திலெல்லாம் காகங்கள் வெண்மையாக இருந்தன. அந்தத் தங்க மோதிரத்தை எடுத்துக் கொண்டு காகம் ராம்லாலை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அப்போது வழியில் ஓர் அழகிய மாங்கனி காகத்தின் கண்ணுக்குத் தென்பட்டது. காகம் மரக்கிளையில் அமர்ந்தவாறு மாங்கனியை உண்டது. அப்பொழுது தங்க மோதிரம் கீழே விழுந்தது. காகம் தன் வயிறு நிரம்பியதால் தங்க மோதிரத்தை மறந்துவிட்டுத் தன் கூட்டிற்குச் சென்றது.

காகத்தின் இந்தச் செயலால் கோபமுற்ற சூரியன் தனது வெப்பத்தால் காகத்தின் வெண்மை நிறத்தைக் கறுமை நிறமாக மாற்றினான்.

- ஆர். ரஜேஷ் குமார்,
பன்னிரண்டாம் வகுப்பு

தெரிந்து கொள்ளுங்கள்!

1. தபால் தலையை வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு - மலேசியா

2. லில்லி பூக்களையுடைய நாடு - கனடா

3. புன்னகை தேசம் என அழைக்கப்படும் நாடு - தாய்லாந்து

- மு. சுகன்,
ஏழாம் வகுப்பு



ஸ்ரீ நாராயண குரு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் ஸ்பெஷல்






பி. சுதர்ஸன்
முதல் வகுப்பு 'ஆ' பிரிவு

எம். சுகன்யா,
ஒன்பதாம் வகுப்பு





வி. வசந்த்,
மூன்றாம் வகுப்பு

எம். சுகன்,
ஏழாம் வகுப்பு



எஸ். முஹமது நபீல்,
ஆறாம் வகுப்பு

எம். உமா,
பத்தாம் வகுப்பு



பி. மணிகண்டன்,
ஏழாம் வகுப்பு

பி. சோலையம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு







லக்ஷ்மி பிரியதர்ஷினி,
ஒன்பதாம் வகுப்பு

ஹெச். அக்ஷை,
முதல் வகுப்பு 'அ' பிரிவு



ஒற்றைக்கண் ராஜா!



பைசா நகரத்து சாய்ந்த கோபுரம், ஈபிள் டவர், தாஜ்மகால் போன்ற உலகப் புகழ் பெற்ற இடங்களுக்குச் செல்கிறவர்கள், தங்களுடைய உள்ளங்கையில் அந்த உலக அதிசயங்களை வைத்துக் கொண்டிருப்பதுபோல புகைப்படங்கள் எடுத்துக் கொள்வது வழக்கம். இங்கே சூரியனையே இரண்டு கைகளிலும் பந்து மாதிரி பிடித்துக் கொண்டிருக்கிறார் இந்த மனிதர். பார்த்து ரசியுங்கள்.




ஹலோ சொல்லிக் கொள்ளும் இந்தப் பூனைக்கும் வாத்துக்கும் நீங்களும் ஹலோ சொல்லுங்கள்!



உலகில் ஏழு பேர் ஒரே மாதிரி உருவ ஒற்றுமையுடன் இருப்பதாகச் சொல்வார்கள்! இங்கே எத்தனை நாய்கள் ஒரே மாதிரி இருக்கின்றன!

ரயில் தெரியும், பஸ் தெரியும். இது பஸ் ரயில். இது போன்று நிஜமாகவே எங்காவது

நெட்பிட்ஸ்




ஓடுகிறதா என்று தெரியவில்லை. ஒரு நண்பர் ஈமெயிலின் மூலம் அனுப்பி இருந்த படம் இது.

அதிசயமான சில மணல் சிற்பங்களை ஏற்கனவே கோகுலம் இன்டர்நெட் பிட்ஸ் பகுதியில் பார்த்திருக்கிறீர்கள். இதோ கீழே உள்ள கோட்டைகூட மணற்கோட்டைதான்.


ஒரு ராஜாவுக்கு ஒரு கண்ணில் பார்வை கிடையாது. அவர் மூன்று ஓவியர்களை அழைத்து, தன்னுடைய ஓவியத்தை வரையும்படிக் கூறினார். அவர் போட்ட கண்டிஷன்: 'ஓவியம் எனக்குத் திருப்தி அளிக்கும் படியாக இருந்தால், ஓவியருக்கு வெகுமதி அளிக்கப்படும். திருப்தி தரா விட்டால், ஓவியர் தண்டனை பெறுவார்.'

முதல் ஓவியர் ராஜாவை ஓவியம் தீட்டினார். நிஜத்தில் ராஜாவுக்கு இருக்கும் ஒரு கண் பார்வைக் குறைபாட்டை, தனது ஓவியத்திலும் காட்டி இருந்தார் அந்த ஓவியர். ராஜா, அந்த ஓவியத்தைப் பார்த்தார். அவர் முகத்தில் அதிருப்தியே இருந்தது. ''ராஜாவுக்கு அவமானம் ஏற்படும் வகையில் ஒரு கண்ணில் பார்வை இல்லை என்பதை ஓவியத்தின் மூலம் காட்டிவிட்டாய்!'' என்று சொல்லி, அந்த ஓவியருக்குத் தண்டனை வழங்கினார் ராஜா.

இரண்டாவது ஓவியர் ராஜாவின் ஓவியத்தை வரைந்து முடித்தார். முதல் ஓவியருக்கு ஏற்பட்ட கதி, இரண்டாவது ஓவியருக்குள் ஒருவித பயத்தை ஏற்படுத்தி இருந்தது. எனவே, நமக்கு எதற்கு வம்பு என்று, இரண்டு கண்களிலும் நன்கு பார்வை இருக்கும்படியாக ஓவி



யத்தை அவர் வரைந்திருந்தார். ஓவியத்தைப் பார்த்தார் ராஜா. அவருக்கும் தண்டனை கொடுத்து விட்டார். அதற்கு ராஜா சொன்ன காரணம் என்ன தெரியுமா? ''எனக்கு ஒரு கண் பார்வை இல்லை என்கிற போது, இரண்டு கண்களிலும் பார்வை நன்றாக இருப்பது போல வரைந்து, மக்களை ஏமாற்றப் பார்க்கிறாய்! அதனால்தான் தண்டனை!''



'இதென்னடா வம்பு! ஒற்றைக்கண் வரைந்தாலும் தண்டனை; இரண்டு கண்களையும் நன்றாக வரைந்தாலும் தண்டனை. நாம் என்ன செய்வது?' என்று குழம்பிப்போன மூன்றாம் ஓவியர், சிறிது நேரம் சிந்தித்தார். சட்டென்று ஒரு ஐடியா வந்தது. அதன்படி ராஜாவின் ஓவியத்தை வரைந்தார். ஓவியத்தைப் பார்த்த ராஜா அசந்து போனார். அந்த ஓவியரைப் பாராட்டி பரிசளித்தார்.


மூன்றாவது ஓவியர் வரைந்த ராஜாவின் படத்தில் அப்படி என்ன இருந்தது என்று கேட்கிறீர்களா? சற்றே யோசித்துப் பாருங்கள். விடை கீழே.

தாய்லாந்து நாட்டில், யானைகளுக்கு இசைக் கருவிகள் வாசிக்கவும் ஓவியம் வரையவும் பயிற்சி கொடுத்தார்கள். இப்போது மனிதர்களைப் போல டாய்லெட்களைப் பயன்படுத்துவது எப்படி என்று பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். யானைகளுக்கென்று ஜம்போ சைஸ் டாய்லெட்டும் வடிவமைத்திருக்கிறார்கள்! தாய்லாந்தில் உள்ள சியாங் மாய் மிருகக் காட்சிக்குப் பக்கத்தில் உள்ள யானைகள் முகாமில் உள்ள ஏழு யானைகள் தினமும் இப்படித்தான் தங்கள் காலைக் கடன்களை முடிக்கின்றன.

கடைசியாக கதைக்கு விடை:

மூன்றாவது ஓவியர், ராஜாவின் உருவத்தை பக்கவாட்டில் தீட்டினார். இதனால் ஒரு கண் மட்டுமே தெரியும். அது பார்வை உடைய கண். ஆக, ஓவியத்தைப் பார்த்த மன்னருக்குத் திருப்தி.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**



சைவராயர் பரம்பரையில் தோன்றியவர்கள் வாழும் இல்லங்கள் திருமாளிகை எனப்படும். அவர்கள் சோழ அரசர்களுக்குக் குருவாக இருந்தனர். அந்த வழி வந்த திருமாளிகைத்தேவர் போகநாதரின் சிஷ்யர். அவரோடு வித்தை கற்றவர்கள் கருவூர்த்தேவர், சேந்தனார்.


ஒரு நாள் காவிரியில் நீராடி, பூக்களைப் பறித்துக் குடலையில் நிரப்பி அபிஷேகத்துக்கான குடத்து நீருடன் மடத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் மாளிகைத் தேவர். அது மடத்துக்கு வரும் குறுக்குச் சந்து.

எதிரே பறை முழங்க மயானத்துக்குப் பிணத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். 'தீட்டுப் பட்டால் பூ பூஜைக்கு ஆகாது. மறுபடி காவிரிக்குச் சென்று குளித்து, அபிஷேக ஜலம் எடுத்துவர வேண்டும். பூஜைக்குத் தாமதமாகுமே' என யோசித்தார்.

பூக்குடலை, தீர்த்தக்குடம் இரண்டையும் வானை நோக்கி வீசினார். அது அவருடனேயே தொடர்ந்து வந்தது. மேற்கு திசையில் ஒரு பிள்ளையார் வீற்றிருந்தார்.

''விநாயகரே! இந்த உயிரைத் திருப்பி உடலில் சேர்க்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். இறந்தவன் எழுந்து நடந்து வந்து

ஆர். பொன்னம்மாள்



நந்தி நடத்திய போர்!

மாளிகைத் தேவரை வணங்கினான். கூடியிருந்தவர்கள் பிரமித்தனர்.

''அந்தக் கணபதி அருளினான்'' என்றார் தேவர். கணபதி அன்று முதல் கொட்டுத் தவிர்த்த கணபதி என்று அழைக்கப்படுகிறார். அப்போது கழற்சிங்கன் ஆட்சி புரிந்த காலம்.

கழற்சிங்கனுக்குக் கப்பம் கட்டிய சிற்றரசன் நரசிங்கன். அவன் பொறாமையாளர்கள் கூறிய பொய் மொழிகளை நிஜமென நம்பி திருமாளிகைத் தேவரைக் கட்டி இழுத்து வரும்படி வீரர்களை அனுப்பினான். சித்தர் முன் வந்த ஏவலர் மதிமயங்கி தாங்களே ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு வேந்தன் முன் போய் நின்றனர்.

''மன்னா! அவன் பெரிய மாயாஜாலக்காரன். அவனை

உயிரோடு விட்டால் நாட்டையே தன் வசமாக்கிக் கொண்டு விடுவான். கொங்கணவர் என்பவரும் ஒரு சித்தர்தான். அவருடைய கமண்டலத்திலுள்ள நீர் என்றுமே வற்றியதில்லை. ஆனால் மாளிகைத் தேவன் வற்ற வைத்து விட்டான். பிணத்தை எழுப்பி நடக்கச் செய்கிறான். இவனை அழிக்காவிட்டால் உங்கள் பெருமை சீர்குலைந்து விடும்'' என தூபமிட்டனர் பொறாமையாளர்கள். படைத் தலைவர்களை அழைத்து, ''அந்த மந்திரவாதியை வெட்டித் தலையைக் கொண்டு வாருங்கள்'' என உத்தரவிட்டான் நரசிங்கன். தேவர் முன் வந்ததும் தங்களைத் தாங்களே வெட்டிச் சாய்த்துக் கொண்டனர் தளபதிகள்.

இதைத் தொலைவிலிருந்து பார்த்த வீரர்கள் நரசிங்கனிடம் விரைந்து சென்று செய்தி கூறினர்.

சினத்தீ கொழுந்து விட்டெறிய நால் வகைச் சேனையுடன் படையெடுத்து வந்தான் மன்னன்.

''தாயே! நான் ஒற்றை ஆள். நீதான் உன் பிள்ளைக்குத் துணையிருக்க வேண்டும்'' என்று ஆலயத்தில் சென்று முறையிட்டார் தேவர்.

''நந்தி! வெளிப் பிரகார மதிலிலுள்ள நந்திகளையெல்லாம் சேர்த்துக் கொண்டு நரசிங்கனையும் அவன் அமைச்சர்களையும் கட்டி இழுத்து வா'' என அம்பாள் சன்னதியிலிருந்து குரல் ஒலித்தது.

அவ்வளவுதான்! மதில் மேல் செதுக்கப்பட்டிருந்த காளைச் சிற்பங்கள் உயிர் பெற்றன. படைகளையெல்லாம் துவம்சம் செய்தன. நந்தி தேவரால் கட்டப்பட்டு அம்பிகை முன் நின்றனர் நரசிங்கனும் அவரது அமைச்சர்களும்!

எல்லா காளைகளும் நந்தி தேவருடன் இணைந்தன. நரசிங்கனும் ''திருமாளிகைத் தேவரே! அறியாமல் செய்த என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என மாளிகைத் தேவரை வணங்கினான்.

யார் அந்தப் பிரபலம்?



அப்பா, அம்மா இருவரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள்.

இன்றும் திருவாவடு துறைக் கோயில் மதிலில் நந்திசிற்பங்கள் இல்லாததைப் பார்க்கலாம்.

ஒரு நாள் இரவு ஏழு மணி. குருநாதருடன் கோயிலுக்குப் போனார் மாளிகைத் தேவர். அங்கே பயற்றஞ் சுண்டல் விநியோகம் செய்தனர். போகர் சீடருடன் வெளியே வந்தார். தினமும் தீவட்டி பிடிப்பவன் தூங்கி விட்டான். மாளிகைத் தேவர் அவன் தூக்கத்தைக் கலைக்க மனமின்றி அவன் அருகிலிருந்த தீவட்டியைப் பிடித்துக் கொண்டு வந்தார். போகர் ஏதோ சிந்தனையில் நடந்து கொண்டிருந்தார். திருமடத்தை சமீபித்ததும், 'தீவட்டி போதும், இங்கேயே நில்'' என்றபடி உள்ளே சென்று விட்டார் போகர்.


மாளிகைத் தேவர் குரு வார்த்தையைத் தட்டாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தார். மறுநாள் சூரியன் உதயமானான். ஆலயப்பிரசாதமான பயற்றஞ் சுண்டல் ஒரு கையில்; தீவட்டி இன்னொரு கையில்.

தனது தவவலிமையால் வேறு இருகைகளை உண்டாக்கிக் கொண்டு காலை அனுஷ்டானங்களைச் செய்தார்.

''திருமாளிகை எங்கே?'' என்றபடி போகர் வர, ''இங்கே இருக்கிறேன், ஐயா'' என்று தெருவில் இருந்தபடி குரல் கொடுத்தார் தேவர்.

''ஏன் அங்கேயே நிற்கிறாய்?'' என்று போகர் கேட்க, அப்போது தீவட்டி பிடிப்பவன் பதறியபடி ஓடி வந்தான்.

நான்கு கைகளுடன் நின்ற மாளிகைத் தேவரைக் கண்டு அனைவரும் பிரமித்தனர். அவரது குருபக்தி அனைவரையும் வியக்க வைத்தது. அதைவிட ஆச்சரியம் என்னவென்றால் அவர் கையிலிருந்த நைவேத்திய சுண்டல் முளைவிட்டிருந்தது. அதைத் திருமடத்தில் பாத்தி கட்டி விதைக்க அவை செழித்து வளர்ந்தன.



''மூன்று எறும்பு கரண்ட் கம்பத்தில் ஏறிச் சென்றன. அப்போது கரண்ட் இல்லை. திடீரென்று கரண்ட் வந்தது. அப்போது இரண்டு எறும்புகள் ஷாக் அடித்து கீழே விழுந்தன. ஒரே ஒரு எறும்பு மட்டும் போய்க்கொண்டே இருந்தது. ஏன்?''

''அது கட்ட எறும்பு!''

– எஸ். பீர்முகம்மது, ஒன்பதாம் வகுப்பு, எண்ணூர்

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுப் பிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் வாங்க மறக்காதீர்கள். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி **20.03.2005**.

I. பதில் என்ன?

1. சீனப் பெருஞ்சுவர் எவ்வளவு பழைமையானது?


2. சீனப் பெருஞ்சுவரின் நீளம்?

3. நிலவில் இருந்து பார்த்தால் சீனப் பெருஞ்சுவர் தெரியுமா?

4. எந்த வம்சத்தினரால் இந்தப் பெருஞ்சுவர் பெரும்பாலும் கட்டப்பட்டது?

5. எதற்காக இந்தப் பெருஞ்சுவர் கட்டப்பட்டது?

1000/- ரூபாய்



II. விஞ்ஞானிகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.







பரிசுப் போட்டி







தாமஸ் ஆல்வா எடிசன்,
கிரஹாம்பெல்,
அலெக்ஸாண்டர் ஃபிளமிங்,
மார்கோனி, ஐசக் நியூட்டன்,
ஜே.சி.போஸ்

ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



I


மூன்று இலக்கங்கள் கொண்ட எண்ணை எழுத வேண்டும். அதே எண்ணை மீண்டும் எழுதிய எண்ணின் பக்கத்திலேயே எழுத வேண்டும். இப்பொழுது ஆறு இலக்கமாகிய அந்த எண்ணை 11ஆல் வகுத்தால் மீதியின்றி வகுபடும். வரும் ஈவை 13ஆல் வகுத்தால் மீதியின்றி வகுபடும். இப்பொழுது கிடைக்கும் ஈவை 7ஆல் வகுத்தால் முதலில் நாம் எடுத்துக் கொண்ட மூன்று இலக்க எண் கிடைக்கும்.

உதாரணம்:

$$\frac{365365}{11} = \frac{33215}{13} = \frac{2555}{7} = 365$$

இது போல் எந்த எண்ணை எழுதி வகுத்தாலும் நாம் முதலில் எழுதிய எண் கிடைக்கும். எழுதி வகுத்துப் பாருங்கள்.

- சு. கண்ணகி, மிட்டூர்



II

கோவா கடற்பகுதியில் 6 அடி உயரத்திற்கு அலைகள் எழும்புகின்றன. அப்பகுதியில் ஒரு சிறிய படகு நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருக்கிறது. படகின் தளத்திலிருந்து ஓர் ஏணி தொங்கவிடப்பட்டுள்ளது. அது கடலைத் தொட்டபடி தொங்குகிறது. அலைகள் இல்லாத போது அந்த ஏணியில் 10 ஏணிப்படிகள் தெரிகின்றன. அலைகள் பொங்கியெழும் போது நீர் மட்டம் 6 அடி உயருகிறது. அப்படி என்றால் எத்தனை ஏணிப்படிகள் தெரியும்?

- ரெ. செல்வரத்தினம், அறந்தை

எத்தனை

III

சென்னையிலிருந்து சிலர் கரூரில் நடந்த திருமணத்துக்குக் கிளம்பினார்கள். மூன்று கார்கள் கிளம்பின. அவற்றில் முதல் காரில் ஆண்கள் இருந்தார்கள். நடு காரில் குழந்தைகளும், கடைசி காரில் பெண்களும் இருந்தனர்.

அவர்களில் குழந்தைகளே எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். மொத்தத்தில் ஆண்களும் பெண்களும் சரிபாதியென்றால், குழந்தைகள் மறுபாதி.

மற்றொரு வகையாகப் பார்த்தால் ஆண்களும் குழந்தைகளும் சேர்ந்தால் 14 பேர், பெண்களும் குழந்தைகளும்

[redacted]

சேர்ந்தால் 19 பேர். அப்படியென்றால் ஒவ்வொரு காரிலும் எத்தனை பேர் இருந்தார்கள்?

- ஆர். பிரசன்னா, கரூர்



IV **கா**லியாக உள்ள கட்டங்களில் 1, 2, 4, 5, 10, 20, 25, 50 மற்றும் 100 ஆகிய எண்களை நிரப்ப

ஏணிப்படிகள் தெரியும்?

வேண்டும். அதே சமயம் மேல் கீழாக, இடவலமாக, குறுக்குவாட்டில் இப்படி எந்த வரிசையில் உள்ள மூன்று எண்களைப் பெருக்கினாலும் விடை 1,000 என்று வர வேண்டும்!

	10	

- ஈ. சுஜிதா, ஒன்பதாம் வகுப்பு, அ.பெ.மே.நி. பள்ளி, ஆரணி

V **இ**ரண்டு தாய்மார்கள் தங்கள் மகள்களுக்கு முறையே 300 ரூபாயும் 200 ரூபாயும் கொடுக்கின்றனர். பணத்தைப் பெற்றுக் கொண்ட இரு மகள்களும் அவற்றை எண்ணிப் பார்த்த போது இருவருக்கும் சேர்த்து 300 ரூபாய்தான் இருப்பது தெரிந்தது. ஆனால் இருவரிடமும் சேர்ந்து 500 ரூபாய் அல்லவா இருக்க வேண்டும்?

- ம. சந்தோஷ், நான்காம் வகுப்பு, சிவகாசி அரிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி

விடை 75 ஆம் பக்கம்


VI 1. இந்தியாவில் தொலை பேசி உபகரணங்கள் தயாரிக்கும் நிலையம் உள்ள இடம் ____________

2. 'ஐரோப்பாவின் போர்க்களம்' என அழைக்கப்படுவது ____________

3. ஏசு கிறிஸ்து பிறந்த இடம் ____________

- சி. சகுந்தலா, ஆதனூர்

தங்கச் சேனைக் கிழங்கு






அன்று இரவு -
எழுந்திரிங்க. நான் ஒரு கனவு கண்டேன். நீங்கள் வைத்த சேனைக் கிழங்கு தங்கமாகிவிட்டது!
உடனே மதன்லால் சேனைச் செடியைப் பிடுங்கினான்.
ஆஹா! சேனைக் கிழங்கு தங்கமாகிவிட்டதே!
இதை யாரிடமும் வெளியில் சொல்லாதே! இதில் பங்கு கேட்டுவிடப் போறாங்க.
அதனால் என்ன? இவ்வளவு தங்கத்தை வைத்து நாம் என்ன செய்யப் போறோம்? இல்லாதவங்களுக்குக் கொடுக்கலாமே!
என்ன சொல்றே? கடவுள் நமக்குக் கொடுத்த புதையலை யாருக்கும் தர மாட்டேன்.
அடுத்த நாள்-
சாப்பிட ஏதாவது கொடுங்கள்.
கெட்டுப் போன ரொட்டியைப் போட்டுடலாம்.



இதை எடுத்துட்டு சீக்கிரம் கிளம்பு.
உனக்கு இதுவே அதிகம்!
புழு வந்து விட்டது.
இன்று இரவு உனக்கு ஒரு கனவு வரும்.
ஆஹா! மறுபடியும் புதையல்!
அன்று இரவு மதன்லால் சீக்கிரமாகப் படுத்தான்.
கனவு வரணும்னா நான் நல்லாத் தூங்கணும்.
பிறகு -


ஐயோ! எல்லாம் போச்சே!
என்ன சொல்றீங்க?
என் கனவில் தங்க சேனைக்குப் பதில் இரண்டு சாதாரண சேனைக்கிழங்குகள் இருந்தன.
அப்படியா? வாங்க பார்க்கலாம்.
© JINGLE BELL CREATIONS
ஐயோ! உண்மையிலேயே ரெண்டு சாதாரண சேனைக் கிழங்குகள்தான் உள்ளன!
எல்லாம் உங்க சுயநலத்தால் வந்தது.
நீ சொல்வது உண்மைதான்.
அதன் பிறகு மதன்லால் நல்லவனாக மாறினான்.



பந்திக்கு வரும் முந்தி, வெளியில் போகும் பிந்தி!

I 1. என்ன தான் கிடைச்சாலும் ஆசைதான் அடங்காது, கடன்காரன் போல வந்து வந்து போவான் - யார் அவன்?

2. கதவு உண்டு. திறக்கலாம், மூடலாம், பூட்டு மட்டும் போட முடியாது - அது என்ன?

3. தகப்பனைப் பார்த்ததில்லை, தானாக ஒரு போதும் தாயாரைப் பிரிந்ததில்லை - யார் அது?

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

II 1. அனலிலே பிறப்பான், ஆகாயத்தில் பறப்பான் - அவன் யார்?

2. பூட்டிய வீட்டுக்குள் திருடன் - அவன் யார்?

3. வராதவன் வந்தால் திறக்காதவன் திறப்பான் - அவன் யார்?

- ஆ. கிருபாகரன், ஆட்டையாம்பட்டி

விடுகதைப் பக்கம்

III 1. ஒடிச்ச குச்சியில் ஒய்யார சங்கீதம் - அது என்ன?

2. தன்னைக் கரைத்து பிரகாசம் தருவான் - அவன் யார்?

3. தண்ணீருக்குள் ஆடுவான், கரைக்கு வந்தால் பதுங்குவான் - அவன் யார்?

- ஆர். விக்னேஷ், ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

IV 1. கல்லைச் சுமந்தவன் கறிக்கு ருசி - அவன் யார்?

2. பந்திக்கு வரும் முந்தி, வெளியில் போகும் பிந்தி - அது என்ன?

3. கால் இல்லாத மான், வேர் இல்லாத புல்லைத் தின்னும் - அது என்ன?

- யாஸ்மீன் ஆறாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை, தர்மராஜபுரம், பரமக்குடி

விடைகள்

I 1. கடல் அலை 2. கண் இமை 3. வாழைக் கன்று

II 1. புகை 2. மாங்கொட்டை வண்டு 3. கொட்டாவி

III 1. மூங்கில் - புல்லாங்குழல் 2. துணி சோப்பு 3. நண்டு

IV 1. புடலங்காய் 2. வாழையிலை 3. மீன், பாசி

மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது!

சிகரம் எட்ட சில வார்த்தைகள், வெற்றி நிச்சயம், நீ ஏறும் இடமெல்லாம் எவரெஸ்ட்தான், உனக்குள்ளே ஒரு சக்தி இருக்கு, நெஞ்சே நிமிர்ந்து நில், நம்மால் முடியும் இது போன்ற தன்னம்பிக்கை தரும் தலைப்புகளில் மேடையில் பேசி வருகிறார் சங்கமித்திரை.

மேடை என்றாலே நடுங்கும் பலருக்கு. பேராசிரியர்கள் நிரம்பியிருக்கும் பல்கலைக் கழகத்திலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மத்தியிலும் அற்புதமாகப் பேசி அனைவரையும் நம்பிக்கை கொள்ளச் செய்கிறாள் சங்கமித்திரை.

பூம்புகார், ஸ்ரீ தையல் நாயகி மெட்ரிகுலேஷன் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கும் சங்கமித்திரையின் நிகழ்ச்சிகள் டீ.விகளில் ஒளிபரப்பப்பட்டுள்ளன.



* சங்கமித்திரை



* வினிஷா

பயமின்றி, தெள்ளத் தெளிவாகப் பேசும்



"பாய் ஃபிரண்ட், கேர்ள் ஃபிரண்ட்ன்னு கேள்விப்பட்டிருக்கேன், அது என்னடா புதுசா கோள் ஃபிரண்ட்?"

"என்னைப் பற்றி அப்பப்ப உங்களிடம் 'கோள்' மூட்டற ஃபிரண்ட் சார்!"

- சிரி. கிருஷ்ணரத்னம், காட்டாங்குளத்தூர்

சங்கமித்திரையின் திறமையைப் பார்த்து பெற்றோர்கள் சின்ன வயதிலேயே பயிற்சி கொடுக்க ஆரம்பித்து விட்டனர். எந்தத் தலைப்பு கொடுத்தாலும் அழகாகப் பேசி அசத்தி விடுகிறாள்!

இவளின் எதிர்கால லட்சியம் மிகச் சிறந்த பேச்சாளர் ஆவதுதான்!

பரதத்தை குறைந்தது ஐந்து ஆண்டுகள் கற்ற பின்னரே அரங்கேற்றம் செய்வார்கள். ஆனால் கற்க ஆரம்பித்து இரண்டே ஆண்டுகளில் அரங்கேற்றம் செய்து, தொடர்ந்து நிகழ்ச்சிகளை அளித்து வருகிறாள் வி.கே. வினிஷா! இதற்கு காரணம் அவளது ஆர்வமும் விடா முயற்சியும்தான்!

ஐந்து வயதில் டீ.வியில் வரும் நடன நிகழ்ச்சிகளை மிகவும் விரும்பிப் பார்க்க ஆரம்பித்தாள் வினிஷா. நிகழ்ச்சியை ரசிப்பதோடு மட்டுமின்றி அதைப் பார்த்து பாடவும் ஆடவும் ஆரம்பித்து விட்டாள். நடனத்தின் மீது இவருக்கு இருந்த ஆர்வத்தைப் பார்த்து விட்டு பரதம் கற்றுக் கொடுக்க பெற்றோர் கே.வி. கதிரவனும் ஜெயசுதாவும் முடிவெடுத்தனர். இன்று நடனப் பயிற்சி, நடன நிகழ்ச்சி என மிகவும் பிஸியாகிவிட்டாள் வினிஷா.

ஆலந்தூர் ஃபைன் ஆர்ட்ஸ் மூலம் 'வளரும் கலைஞர் 2004', டியூக்ஸ் 2004 திரைப்பட விருது விழாவில் 'வளரும் சிறந்த பரத நாட்டிய கலைஞர்' ஆகிய அவார்டுகள் இவளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

வினிஷா சென்னை - அண்ணாநகர் சின்மயா வித்யாலயாவில் இரண்டாம் வகுப்பு படிக்கிறாள். படிப்பிலும் இவள் நம்பர் ஒன் என்கிறார்கள் ஆசிரியர்கள்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என நிரூபித்த வினிஷா மற்றும் சங்கமித்திரையை மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துவோம்!



வழி
கண்டுபிடியுங்கள்

வேலன் ஒரு விறகு வெட்டி. தினமும் காட்டிற்குள் சென்று விறகுகளை வெட்டி வந்து விற்றுப் பிழைப்பதுதான் அவன் தொழில்.

ஒரு நாள் வேலன் விறகு வெட்டுவதற்காக காட்டிற்குள் சென்றான். ஒரு மரத்தடியில் முனிவர் படுத்திருப்பதைக் கண்டான். அதனால் அந்த இடத்திலிருந்து திரும்பிச் சென்றான். காலடியோசை முனிவரை விழிக்க வைத்தது.

''யாரது?'' என்று கேட்டார்.

வேலன் திரும்பிப் பார்த்தான். ''சாமி, வணக்கம், என் பேர் வேலன். விறகு வெட்ட வந்தேன்'' என்றான்.

''வெட்டாமல் ஏன் திரும்பிச் செல்கிறாய்?'' என்று கேட்டார்.

''நீங்கள் படுத்திருப்பதைப்

மந்திரத் தூக்கு!



பார்த்தேன். இங்கே வெட்டினால் அந்தச் சத்தம் உங்களுக்குத் தொந்தரவாக இருக்கும். அதனால்

வேறு இடத்தில் சென்று வெட்டுகிறேன்'' என்றான்.

''பரவாயில்லையே! யார் எப்படி இருந்தாலும் நமக்கென்ன என்று நினைக்காமல் அடுத்தவர்களுக்குத் தொல்லையாக இருக்கக் கூடாது என நினைக்கிறாயே, நல்ல மனம் படைத்தவன்தான். அதென்ன கையில் மூட்டை?'' என்று கேட்டார்.

''குடிப்பதற்கு கஞ்சி'' என்றான் வேலன்.

''எனக்குக் கொஞ்சம் தருகிறாயா?'' என்று கேட்டார் முனிவர்.

''ஓ! தாராளமாகத் தருகிறேன்'' என்று கூறிய வேலன் மூட்டையைப் பிரித்தான். ஒரு தூக்குப் பாத்திரம் நிறைய கஞ்சி இருந்தது. ஊற்றிக் குடிப்பதற்கு ஒரு சிறியப் பாத்திரமும் இருந்தது. அதில் ஊற்றி முனிவரிடம் கொடுத்தான்.

குடித்த முனிவரின் முகம் மலர்ந்தது. ''ஆஹா! நான் எத்தனையோ ஜமீன்தார்கள் வீட்டிற்குச் சென்று அறுசுவை உணவுகளைச் சாப்பிட்டு இருக்கிறேன். அதையெல்லாம் இந்தக் கஞ்சியின் சுவை மிஞ்சி விட்டது. இன்னும் ஊற்று'' என்றார்.

இப்படியே திரும்பத் திரும்ப வாங்கிக் குடித்தார். கஞ்சி மொத்தமும் காலியாகி விட்டது. ஆனால் வேலன் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. இன்னொரு முறை கேட்க கூடாதே என்று நினைத்துக் கொண்டான்.

நல்ல வேளை. முனிவர் ஒரு ஏப்பம் விட்டவாறு ''அப்பாடி வயிறு நிறைந்தது. ஆமாம் நானே நிறைய குடித்து விட்டேன் போலிருக்கிறதே. உனக்கு இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஓ! இருக்கு சாமி'' என்றான்.

முனிவர் புன்னகையுடன் ''அப்படியா? இருக்கட்டும்! இருக்கட்டும்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார்.



வேலன் விறகை வெட்டி

னான். மத்தியான நேரமானதும் பசி வயிற்றைக் கிள்ளியது.

''அந்தப் பாத்திரத்தில் தண்ணீரையாவது பிடித்துக் குடிப்போம்' என்று நினைத்தவாறு கஞ்சித் தூக்கை எடுத்தான். கனமாக இருந்தது. புரியாமல் திறந்தவனுக்கு வியப்பு. பாத்திரம் நிறைய கஞ்சி இருந்தது. அவனுக்குப் புரிந்தது.

'முனிவர் சிரித்துக் கொண்டே இருக்கட்டும் என்று சொன்னதன் பொருள் இது தானா? தனது சக்தியால் மீண்டும் கஞ்சியை வரவழைத்து இருக்கிறார்' என்று நினைத்துக் கொண்ட வேலன் அதைக் குடித்தான். அது முன்பை விட இன்னும் சுவையாக இருந்தது.

மொத்தக் கஞ்சியையும் குடித்து விட்டு மீண்டும் விறகுகளை வெட்டி மூட்டையாக்கிக் கொண்டு கிளம்புவதற்கு தூக்கை எடுத்தான். இப்போதும் அது கனமாகவே இருந்தது. திறந்து பார்த்தால் என்ன ஆச்சர்யம்! மீண்டும் பாத்திரம் நிறைய கஞ்சி இருந்தது.

வீட்டுக்கு வந்த வேலன் மனைவியிடம் விஷயத்தைக் கூறினான். ''இதை நாம் மற்றவர்களுக்கும் பயன்படுத்துவோம். பசியால் வாடுவோர் அனைவருக்கும் கொடுப்போம்'' என்றாள் அவன் மனைவி.

விஷயம் ஊர் முழுவதும் பரவியது. வேலன் வீடு முன்பு எப்போதும் கூட்டம் இருக்கும். அனைவரும் அங்கே வந்து கஞ்சியைக் குடித்து விட்டுச் செல்வார்கள். இருவரும் முகம் சுளிக்காமல் யார் எப்போது வந்து கேட்டாலும் கஞ்சியைக் கொடுப்பார்கள்.

இதையெல்லாம் அடுத்த வீட்டில் இருந்த பாலன் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எப்போதும் பணம் தான் குறி.

ஒரு நாள் அவன் வேலனை அழைத்து ''என்ன வேலா பிழைக்கத் தெரியாத ஆளாக இருக்கிறாயே, அட்சயப் பாத்திரம் போல் உனக்கு ஒன்று கிடைத்திருக்கிறது. அதை இலவசமாகவா கொடுப்பது? ஒரு தூக்கு கஞ்சி இவ்வளவு ரூபாய் என்று விற்றால் பணம் கிடைக்கும். நிறையப் பணம் சேர்த்து பெரிய வீடு, ஆடை, ஆபரணங்கள் என்று சுகபோக வாழ்வு வாழலாமே'' என்று ஆசை காட்டினான்.

''பாலா, எனக்கு இப்போதுள்ள வாழ்வே திருப்தியாக

யார் அந்தப் பிரபலம்?



இவரது மனைவி வேறு ஒரு நாட்டில் பிறந்து வளர்ந்தவர்.

இருக்கிறது. பசி என்று வருவோருக்கு உணவு அளிப்பது புண்ணியம்'' என்றான் வேலன்.

''சரி, நீ விற்க வேண்டாம். அந்தப் பாத்திரத்தை எனக்கு ஒரு விலைக்கு கொடுத்து விடு. நான் இந்த மளிகை கடையை விட்டு விட்டு அதை வைத்து பிழைத்துக் கொள்கிறேன்'' என்றான் பாலன்.

''இல்லை பாலா. நான் அதை யாருக்கும் விற்கப் போவதில்லை'' என்று உறுதியுடன் கூறிய வேலன் அங்கிருந்து சென்று விட்டான்.

பாலனுக்கு கோபம் வந்தது. 'அடேய் வேலா விற்க மாட்டாயா? உனக்குச் சரியான பாடம் புகட்டுகிறேன். அந்தப் பாத்திரமே இருக்கப் போவதில்லை. விடிவதற்குள் அதைத் திருடி எரியும் அடுப்பில் போட்டு பொசுக்கி விடுகிறேன்' என்று தனக்குள் சபதம் போட்டுக் கொண்டான்.

நள்ளிரவில் வேலனின் வீட்டில் நுழைந்து அந்தப் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தவனுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. சற்றுத் தொலைவில் இருந்த அவனது கடையும் வீடும் தீயில் எரிந்து கொண்டிருந்தன.

''ஐயையோ! என் வீடும் கடையும் எரிகிறதே! ஓடி வாங்களேன்'' என்று கத்தினான்.

அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். நீரை ஊற்றி தீயை அணைத்தார்கள். ஆனாலும் நிறையப் பொருட்கள் எரிந்து சாம்பலாகி விட்டன.

''திடீரென எப்படி தீப்பிடித்தது?'' என்று கேட்டான் வேலன்.

''வேலா! இது கடவுள் எனக்குக் கொடுத்த தண்டனை. எண்ணப்படியே வாழ்வு என்பார்கள். நீ எப்போதும் நல்லதையே நினைப்பாய். அதனால் நல்லது நடந்தது. நான் பாத்திரத்தை தீயில் போட்டு எரிக்க வேண்டுமென நினைத்தேன். என்னுடைய கெட்ட எண்ணத்திற்குப் பரிசாக வீடும் கடையும் எரிந்து போனது. இனி எப்படி பிழைப்பேன்?'' என்று கூறி கண்ணீர் விட்டான் பாலன்.

''போகட்டும் விடு பாலா. நான் உனக்கு உதவுகிறேன். மீண்டும் கடையை வைத்து நேர்மையாக உழைத்து முன்னேறு'' என்ற வேலன், பாலனை அணைத்துக் கொண்டான்.



''ஆங்கிலேயர்கள் படிப்படியா இந்தியா முழுவதையும் கைப்பற்றினார்கள் என்பதிலிருந்து என்ன தெரியுது?''

''அந்தக் காலத்துல, 'லிப்ட்' இல்லேன்னு தெரியுதுப்பா!''

- கே. அரவிந்தலட்சுமி

பல்லி கத்துவது ஏன்?



பல்லிகளைக் கண்டால் நம்மில் நிறையப் பேருக்குப் பயம்! நம் வீடுகளில் உள்ள பூச்சிகள், சிலந்திகளைப் பிடித்துச் சாப்பிட்டு, நமக்கு நன்மை செய்கின்றன பல்லிகள். இது சாதுவான பிராணியும்கூட.

பல்லிகள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நிறத்தில் காணப்படும். இதற்கு காரணம் வாழும் இடத்திற்கேற்ப பல்லிகளால் நிறத்தை மாற்றிக் கொள்ளும் நிறமி (pigment) இவற்றிற்கு உண்டு. இதன் மூலம் மண், பாறை, மரங்களில் வசிக்கும் பல்லிகள் சட்டென எதிரிகளின் கண்களுக்குப் புலப்படாது.

வால் அறுந்த பல்லிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பல்லிகளின் வால் கரும்பின் கணு போல் இடைத் தடுப்பு உடையது. இதனால் ஆபத்து நேரும் சமயத்தில் எதிரியிடம் வாலை





எஸ்.சுஜாதா

மட்டும் கொடுத்து விட்டு, பல்லி தப்பி விடுகிறது. வாலைப் பார்த்த எதிரி குழப்பத்தில் இருக்கும்போது புத்திசாலித்தனமாக வாலை அறுத்துக் கொண்டு சென்று விடுகிறது. சில காலம் வால் இல்லாமல் அலையும். பிறகு இழந்த வால் மீண்டும் வளர்ந்து விடும்.

பல்லியின் நாக்கு சிறப்புத் தன்மை கொண்டது. இதுவே தொட்டு உணரும் உறுப்பாகச் செயல்படுகிறது. சற்றுத் தூரத்தில் இருக்கும் பூச்சியைக் கூட நாக்கை நீட்டி உள் இழுத்துக் கொள்ளும்.

பல்லிகளால் மாதக் கணக்கில் உணவின்றி உயிர் வாழ முடியும். பல்லிகளின் ஆயுட்காலம் இரண்டு ஆண்டுகள்.

சுவரில் எப்படி விழாமல் பல்லி நிற்கிறது என்று எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கும். விரல்களின் அடிப்புறமும் அடிவயிறும் வழவழப்பாக இருக்கும். இவற்றை அழுத்தினால் அந்த இடத்தில் உள்ள காற்று வெளியேறி வெற்றிடமாகும். இதனால் சுவரில் நன்றாக ஒட்டிக் கொள்கிறது. பல்லி சிறிது உடலை அசைத்தாலும் கூட காற்று புகுந்து நகர முடியும்.


பெண் பல்லி இரண்டு முட்டைகளை இடும். முட்டைகள் வெள்ளையாகவும் உருண்டையாகவும் இருக்கும்.

பாம்பைப் போலவே பல்லிகளும் தோலை உரிக்கின்றன. மொத்தமாக உரிக்காமல் பகுதி பகுதியாக உரிக்கக் கூடியவை.

உலகெங்கும் வெப்ப நாடுகளில் பல்லிகள் வாழ்கின்றன. இவற்றில் 2,500 வகைகள் உண்டு.

பல்லி தன் இணையை அழைக்கவே குரல் கொடுக்கிறது. இதனை கௌளி கத்துவதாகச் சொல்வார்கள். நாம் சொல்லும் விஷயம் உண்மையென்றால் பல்லி கத்தும் என்று கூறுவது மூட நம்பிக்கை.





மனம் ஒரு குரங்கு!

குற்றாலத்தில்...

இந்த ஆண்டு சீசனுக்கும் வழக்கம் போல குற்றாலம்



போக வேண்டும் என்றார் அப்பா. அப்போது தங்கை மீனா சென்ற ஆண்டு அங்கு சுற்றுலா போனதை நினைவு கூர்ந்தாள். ''குற்றாலத்தில் என்னென்ன பார்த்தாய்?'' என்று அப்பா விளையாட்டாக கேட்க, அதற்கு அவள், ''மனசைப் பார்த்தேன்'' என்றாள். ''மனசை எப்படி பார்த்தாய்?'' என்று அப்பா அதிர்ந்து கேட்க, ''மனம் ஒரு குரங்குன்னு சொல்லியிருக்காங்களே, அதை அங்கே பார்த்தேனே'' என்று அவள் சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்

எத்தனை கணங்கள்?

ஏழாம் வகுப்பு படித்த போது நடந்த சம்பவம். கணக்கு ஆசிரியர் வந்தால் வகுப்பே கல கலக்கும். அன்றும் அப்படித் தான். 'கணங்கள்' பற்றி பாடம் நடத்தினார். ஒரு மாணவனை எழுப்பி ''கணங்கள் எத்தனை வகைப்படும், அவை யாவை?'' என்றார். ''கணங்கள் இரண்டு வகைப்படும். அவை மனுஷ கணம், பூதகணம்'' என்றான் அவன். வகுப்பே அவன் பதிலைக் கேட்டு சிரித்தது.

- ப. காளிதாசன்,
நீர்விளங்குளம்



கனவு



அன்று விடுமுறை என்பதால் வீட்டில் நாங்கள் அனைவரும் மிக லேட்டாக எழுந்தோம். ஆனால் என் அண்ணன் சேவியருக்கு எழும்ப மனமில்லாமல் சும்மா படுத்திருந்தான். அம்மா எழுந்திரு என்று அதட்டவும் "போங்கம்மா சும்மா அழகா ஒரு கனவு; கிரிக்கெட்ல இந்தியா ஜெயிக்கிற மாதிரி. நல்ல கனவை கெடுத்திட்டீங்களே?" என்றான். "இந்தியா ஜெயிக்கிறது இருக்கட்டும். கனவு காணறதைவிட்டுட்டு ஆக வேண்டியதைப் பாரு" என்றார் அம்மா. அதற்கு அண்ணன் "போங்கம்மா நம்ம ஜனாதிபதி கனவு காணச் சொல்றாரு. நீங்க திட்டறீங்களே?" என்றான். "அவர் ஆக்கப்பூர்வமான கனவு காணச் சொன்னார்டா. ஏன் நீயே கூட கிரிக்கெட் டீமில் இருந்து இந்தியாவை ஜெயிக்க வைக்கிறதா கனவு காணு. அது நடக்கும். அதைவிட்டுட்டு" என்று கூறியபடியே நகர்ந்தார் அம்மா.

- எஸ். டேனியல் லியோ பிரபு,
மதுரை

பரிசு!

நான் மற்ற பாடங்களில் சுமாராகத்தான் மதிப்பெண் எடுப்பேன். ஆனால் தமிழில் முதலாவதாக வருவதுடன் 80 மதிப்பெண்ணுக்கு மேல் வாங்குவேன். நான் தமிழில் நல்ல மதிப்பெண் எடுத்தாலும் ஆண்டுத்தேர்வில் மொத்தத்தில் முதல் மதிப்பெண் எடுத்து பரிசு பெறாதது ஆண்டுதோறும் வருத்தத்தைத் தரும். ஒன்பதாம் வகுப்புத் தேர்வில் தமிழில் 87 மதிப்பெண் எடுத்திருந்தேன்.

சென்ற ஆண்டு பரிசு கொடுக்கும்பொழுது என் பெயரை அழைத்ததைக் கேட்டு வியப்படைந்தேன். என் தமிழாசிரியை எனக்கென்று தனிப் பரிசாக பாரதியார் கவிதை நூலை கொடுத்ததுடன் என் தமிழ் ஆசையைப் பற்றி பேசியது கேட்டு, மகிழ்ச்சியில் என் கண்களிலே கண்ணீர்!

- பி. கார்த்திகா
பத்தாம் வகுப்பு,
சென்னை




5 அம்மாவைத் தேடி...
கதை: வாண்டுமாமா
படம்: மகேஸ்
பேராசைக்காரா, அகிலா அவ அம்மாகிட்ட இருக்கா. உனக்கு வெகுமதி தரோம். நீ எதிர்பார்க்காத வெகுமதி...
என்...னது...!
பிளாக்மெயில் பண்ணி பணம் சம்பாதிக்கும் எண்ணத்தை விட்டுடு. வசந்தாவையும் அகிலாவையும்...
... இணைத்து ஏதாவது பத்திரிகைகளுக்கு சரடு விட நினைச்சே, உன் அநாதை இல்லப் பதவி அம்போவாயிடும். ஓடு! இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காதே!
உன்னை அம்மான்னு கூப்பிடத் தயக்கமாயிருக்கு.
அகிலாக் கண்ணு! அம்மான்னு நீ சொல்ற அந்த ஒரு வார்த்தையை இப்பவும் எப்பவும் கேட்டுக் கொண்டே இருக்கணும்.
அகிலா! நீ எப்போதும் இதேபோல சிரித்துக் கொண்டே இருக்கணும். நம் புதிய வீட்டை நாம் பார்க்கப் போறோம்.


இருவரும் பேசிக் கொண்டே பங்களாவை அடைந்தனர்.
உனக்கு இந்த பங்களா புடிச்சிருக்கா அகிலா?
அற்புதமா இருக்கு அம்மா!
இந்த அழகிய பங்களா நம் இருவருக்கு மட்டுமேங்கிறது ரொம்ப முக்கியம் அகிலா!
என்னோட இந்த ‘டைவ்’ பாரும்மா.
பிரமாதம் அகிலா. நீ எதையும் விரைவா கத்துக்கறே.
யார் இவங்க? இவங்க தோற்றம் என் மனதில் பீதியை உண்டாக்குவானேன்?



முடியாது! நான் அவ்வளவு தொலைவுக்கெல்லாம் போக முடியாது! வேற வழியே இல்லையா இளங்கோ?
சாரி வசந்தா - இது பிசினெஸ்
அம்மா... என்னது? யார் அவங்க?
நாம் இரண்டு பேரும் சேர்ந்து ரெண்டு மாசங்கூட ஆகலே. அதுக்குள்ளே வெளிநாட்டுக்குப் போகணுமாம் ஷூட்டிங் குக்கு.
இளங்கோ புதிய படத் தயாரிப்பாளர். அவர் படத்துக்கு தென் அமெரிக்கா போகணுமாம். மறுக்க முடியாது. ஒப்பந்தம் அப்படி.
நான் உன் கூட வர முடியாதா?
எனக்கு விருப்பம்தான் அகிலா கண்ணு. ஆனா உன் படிப்பு வீணாப் போகும்.
சீக்கிரம் திரும்பிடுவியா?
மூணு மாசம் ஆகும் அகிலா.


அகிலா இந்தப் படம் முடிந்ததும் நான் நடிப்புத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுட்டு, உன்னோடவே எப்பவும் இருப்பேன் ராஜாத்தி!
புரியுதும்மா. என்னைப் பத்திக் கவலைப் படாதே.
கிளம்பும் நாளன்று -
நான் திரும்பியதும் உனக்கு போன் பண்றேன் அகிலா. இளங்கோ சார் உன்னைக் கவனிச்சுப்பார்.
அகிலாப் பொண்ணு இனிமே என் கண்காணிப்பில். வசந்தா கவலைப்படாதே.
தேங்க்ஸ் இளங்கோ சார்!
அம்மாவைப் பிரிந்தது ரொம்ப கஷ்டமா இருக்கு...
நம் திட்டத்தின் முதல் கட்டம் தடங்கலின்றி நிறைவேறிட்டுது. அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அந்தத் தண்டபாணி போகணும்.
சரி பாஸ்.... நல்ல ஐடியா பாஸ்.
பெரிய புதையல் - அதிர்ஷ்டம் காத்திருக்கு.
வசந்தா அம்மா காணாமல் போனதும் எல்லாமே கை கூடிடும் இல்லியா?
தொடரும்


கோகுலம்
போஸ்டர்







…வற்றியின் முகவரி

செரீனா!



சாதனை சானியா!



"செரீனா வில்லியம்ஸுடன் நீங்கள் ஆடிய அதி அற்புதமான ஆட்டத்தைக் கண்டு உள்ளம் பூரிப்படைந்தேன். உங்களால் பரவசப்பட்ட கோடிக்கணக்கான இந்தியர்களில் நானும் ஒருவன். வானுயர வாழ்த்துகள்!"

பதினெட்டு வயதில் ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியில் மூன்றாவது சுற்று வரை முன்னேறி இன்று இளைஞர்களின் முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கும் சானியா மிர்சாவிற்கு இப்படி நெஞ்சார்ந்த வாழ்த்து கூறியது யார் தெரியுமா? நம் பிரதமர் மன்மோகன் சிங்தான்!

விம்பிள்டன் கோப்பையை ஏற்கனவே வென்றாலும் இந்தியா முழுவதும் பிரபலப்படுத்தியிருப்பது இந்த ஆஸ்திரேலிய ஓபன் போட்டிதான்! உலகதர வரிசையில் ஏழாவது இடத்திலிருக்கும் செரீனாவுடன் 166வது இடத்திலிருந்த சானியா மோதுவது எவ்வளவு பெரிய சாதனை!

ஆறு வயதிலிருந்தே டென்னிஸ் பிராக்டீஸ் செய்ய ஆரம்பித்து விட்டார் சானியா. காலையில் ஐந்து மணிக்கு எழுந்ததிலிருந்து டென்னிஸ் கோர்ட்டில் வருத்திக் கொண்டு ஆடியதற்கு இன்றைக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

"ஆஸ்திரேலிய ஓபனைவிட 2002ம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த அலிஸாவுடன் இணைந்து விம்பிள்டன் போட்டியின் இரட்டையர் பிரிவில் வென்று கோப்பை வாங்கியதைத்தான் எனது உச்ச கட்ட வெற்றியாக எண்ணுகிறேன்.

செரீனாவுடன் ஆடிய போது உண்மையாகவே வயிற்றில் பட்டாம் பூச்சி பறந்து கொண்டிருந்தது. ஆனாலும்

என்னைவிட நிச்சயம் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்கிற கட்டாயம் செரீனாவிற்குத் தானிருக்க வேண்டும் என்பதால் பிரஷர் இல்லாமல்தான் ஆடினேன். உனக்கு மிகப் பெரிய எதிர்காலம் இருக்கிறது என்று அவர் வாழ்த்தியது இன்னமும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது'' என்கிறார் 18 வயதான சானியா

சானியாவின் வீட்டில் அப்பா, மாமா என பலரும் கிரிக்கெட் வீரர்கள். இவர் மட்டும்தான் டென்னிஸ் பிளேயர். டென்னிஸைத் தவிர சானியாவுக்கு நண்பர்களுடன் அரட்டை, இந்தி, ஆங்கிலப் படங்களைப் பார்க்கப் பிடிக்கும்.

'லவ் ஆல்' என்றுதான் டென்னிஸ் கேமை ஆரம்பிப்பார்கள். அதேபோல் சானியாவும் மிகவும் அன்பானவர் என்கிறார்கள் அவரது நண்பர்கள்.





காலில் காயம் ஏற்பட்டாலும் மருந்து எடுத்துக் கொண்டு விளையாடியதற்குக் காரணம், இது போன்ற பெரிய போட்டிகளில் கிடைக்கும் புள்ளிகள் தான் இவ்வருடத்திற்குள் முதல் ஐம்பது இடங்களுக்குள் அவரைக் கொண்டு செல்ல முடியும்.

எதிர்காலத்தில் 'டென்னிஸ் அகடமி' ஆரம்பித்து இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டத்தையும் வைத்திருக்கிறார் சானியா!

- செந்தில்

தந்திரம்!





கதை: மா. அழகுராஜன்
படம்: சேகர்

திருடன் , பணம் , நகைகள் , மூட்டை ,

கிணறு , சிறுவன் , காது , கடுக்கண் ,

தங்கச் சங்கிலி , அப்பா , ஊர்ப் பெரியவர்கள் ,

---

 ஒருவன் பக்கத்து ஊரில் திருடிய ,  களை  யாகக் கட்டி எடுத்துத் தன் ஊருக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு  அருகில் இருந்த  எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு வந்த ,  னின்  களில் இருந்த  களைப் பார்த்துவிட்டான். சிறுவனை ஏமாற்றி  களைப் பறித்துக் கொள்ள முடிவு செய்து  னை நெருங்கி, "தம்பி,  க்குள் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அவனது தோற்றத்தைப் பார்த்த , 'இவன்  னாக இருப்பான்' என்றும் தன்னை ஏமாற்றி  களைப்

அபகரித்துக்கொள்ள வந்திருப்பான் என்பதையும் அவனின் பார்வையால் புரிந்து கொண்டான்.  னிடம் இருந்து எப்படி தப்பிக்கலாம் என்பதை முடிவு செய்தவனாய், ''ஐயா, என்னுடைய கழுத்தில் இருந்த , கிணற்றுக்குள் தவறி விழுந்து விட்டது. என்  வுக்குத் தெரிந்தால் உதைப்பார்'' என்று பொய் சொல்லி அழுவதைப் போல் நடித்தான் . இதை நம்பிய ,  யையும் எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டு, ''தம்பி இந்த  யை வைத்திரு. நான்  க்குள் இறங்கி  யை எடுத்து வருகிறேன்'' என்று சொல்லி  யைச் சிறுவனிடம் கொடுத்துவிட்டு  றினுள் இறங்கித் தேடினான்.  றினுள்,  இல்லாததால்  ஏமாற்றம் அடைந்து மேலே ஏறி வந்தான். அங்கே  யும்  யையும் காணாமல் ஏமாந்து நின்றான். அந்தச் ,  யைக் கொண்டு போய்  களிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னான்.

  னைப் பாராட்டினர்.

அன்புள்ள டாக்டருக்கு,

நான் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு ஓர் அக்கா இருக்கிறாள். நான் அப்பா மாதிரி கறுப்பாக இருப்பேன். இதனால் அம்மாவுக்கு என்னைப் பிடிக்க வில்லை. அக்கா என்ன தவறு செய்தாலும் அம்மா ஒன்றும் சொல்ல மாட்டார். அதே நேரத்தில் நான் செய்யும் சிறு தவறுகளைக் கூடப் பெரிதுபடுத்திப் பேசுவார், திட்டுவார். அக்காவுடன் என்னை ஒப்பிட்டுப் பேசுவார். அவளைப் போலவே நடக்க வேண்டும், படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவார். இதனால் அம்மாவுடன் அடிக்கடி சண்டை போடுவேன். என் பிரச்னைக்கு ஒரு நல்ல யோசனை கூறுங்கள் டாக்டர்!

- ஆ. மலர்விழி,
மயிலாடுதுறை

கறுப்பாக இருப்பதால் யாருக்கும் பிடிக்கவில்லை!

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. இந்தப் பழமொழி உனக்குத் தெரியுமல்லவா? பொதுவாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஒரேமாதிரி தான் நேசிப்பார்கள். நிறத்தால் பேதப் படுத்த மாட்டார்கள். உன் அம்மாவும் அப்படித்தான் இருப்பார் என்று நம்புகிறேன். நீ கறுப்பாக இருப்பது உனக்குப் பிடிக்க வில்லை. அதன் பிரதிபலிப்பு தான் இந்த நினைப்பு. 'கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு' பாடலைக் கேட்டிருப் பாயே? கறுப்பாக இருப்பதும் ஓர் அழகுதான். மலர்விழி, நிறம் கறுத்தால் பரவா யில்லை; மனம்தான் கறுக்கக் கூடாது. இன்றிலிருந்து நீ கறுப்பு,அக்கா சிவப்பு எனும் பேதத்தை மறந்து விடு.



நீயும் அக்காவைப் போல



படிப்பிலும் மற்றவற்றிலும் திறமைசாலியாக வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உன் அம்மா உன்னைத் திட்டியிருக்கலாம். அது உன் நன்மைக்காகத்தான். அடுத்த முறை அம்மா உன்னைத் திட்டும்போது ஏன் திட்டுகிறார் என்று யோசித்துப் பார். உன்னிடம் தவறு இருந்தால் உடனே மன்னிப்புக் கேள். அதே தவறு மீண்டும் நடக்காதவாறு நீ நடந்து கொள். உன்னிடம் தவறு இல்லையென்றால் அதை அம்மாவிடம் அமைதியாக எடுத்துக் கூறு. இருவரும் சமாதானமாகி விடலாம்.

இதை விட்டுவிட்டு பதிலுக்கு பதில் அம்மாவுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் புகையை ஊத ஊத நெருப்பாகிற மாதிரி சிறு பிரச்னைகூட பெரிதாகி இருவருக்குமே மனம் துன்பப்படும். ஆகவே அம்மாவுடன் சண்டை போடுவதை நிறுத்திவிட்டு நெருக்கமாகப் பழகத் தொடங்கு. ஓய்வு நேரங்களில் அம்மாவுக்கு உதவி செய். பள்ளியில் நடந்ததை, நூல்களில் படித்ததை உன் அம்மாவுடன் பகிர்ந்து கொள். அதேநேரத்தில் நீ உன் படிப்பிலும் அதிக கவனம் செலுத்து. உன்னிடமுள்ள மற்ற திறமைகளையும் வெளிப்படுத்து. அம்மா உன்னையும் செல்லமாக வைத்துக் கொள்வார்.

இது உன் அம்மாவுக்கு:

குழந்தைகளைத் திட்டாதீர்கள். அவர்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது அன்பான வார்த்தைகளைத்தான். தவறு செய்யும் போது கனிவான பேச்சினால் திருத்துங்கள். எப்போதும் காயை அடித்துப் பழுக்க வைக்கக் கூடாது. தானாக பழுப்பதுதான் நல்லது. அடுத்த குழந்தைகளை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசாதீர்கள். அப்படி ஒப்பிடும் போது குழந்தைகளுக்குள் போட்டி, பொறாமை, பகைமை, தாழ்வு மனப்பான்மை போன்றவை வந்துவிடுகின்றன. குழந்தைகளுடன் நிறையப் பேசுங்கள். வாழ்க்கைக்கு உதவும் கதைகள் சொல்லுங்கள். அவர்கள் சொல்வதையும் பொறுமையாகக் கேளுங்கள். அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கவும் உதவுங்கள். அப்போதுதான் குழந்தைகளுக்கு உங்கள் மீதுள்ள அன்பு அதிகமாகும்.

டாக்டர் கு.கணேசன்

போவோமா புது உலகம்!

பனிப் பாலைவனம்!

ஒரு சதுர வீடு. அதன் நான்கு பக்கங்களிலும் கதவுகள். எந்தக் கதவைத் திறந்து நீங்கள் வெளியே வந்தாலும் அது தெற்குத் திசைதான்! இந்த வீடு எங்கிருக்க முடியும்? வட துருவமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும்தான். பூமியின் வட துருவத்தில் உள்ள ஆர்ட்டிக் வட்டமே ஆர்ட்டிக் பிரதேசம் எனப்படுகிறது. ஆர்ட்டிக் மையத்தில் மிகப் பெரிய பெருங்கடல் உள்ளது. அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு ஓர் அழகான இயற்கை அமைப்பு கொண்டது.



ஆர்ட்டிக் பரந்த பகுதிகளைக் கொண்டது. இதன் பரப்பு ஒரு கண்டத்துக்கு மட்டுமே சொந்தம் இல்லை. வட அமெரிக்காவின் கனடா, ஆசியாவின் ரஷ்யா, கிரீன்லாந்து, ஸ்காண்டிநேவியா, ஐஸ்லாந்து, அலாஸ்கா, ஸ்வல்பார்டு மற்றும் சில தீவுகள் என பல கண்டங்களின் பகுதிகளையும் தன்னகத்தே கொண்டதுதான் ஆர்ட்டிக். ஆர்ட்டிக் என்றாலே பனி மூடிய பூமிதான் நம் கண் முன்னே நிற்கும். ஆர்ட்டிக்கை 'பனிப் பாலைவனம்' என்றே அழைக்கின்றனர். குளிர்காலத்தில் சைபீரியாவின் வடகிழக்குப் பகுதிதான் இதுவரை உலகில் மிகக் குறைவான குளிராய், மிகவும் நீண்டது. கோடைக் காலம் மிகவும் குறைவான நாட்களைக் கொண்டது. இங்கே டிசம்பர் 22ம் நாள் சூரியனே தோன்றாது. ஒரு முழு நாளும் பகலில்லாத இரவுதான்!







மேற்பகுதி மட்டும் தான் பனிப்பாறைகள். அதற்கு கீழே தண்ணீர் உறையாமல் இருக்கும். ஆனால் தரைப் பகுதியில், அடிமண் குளிரில் உறைந்து போவதால், ஆற்று நீர் திட்டுகளாக மேலே நிற்கும். எனவே நிலம் சதுப்பு நிலப் பகுதியாகவும் இருக்கிறது. ஆனால் ரஷ்யப் பகுதியிலும் வட அமெரிக்கப் பகுதியிலும் ஆறுகள் உண்டு.

கடுமையான



அதேபோல ஜூன் 21ம் நாளில் சூரியன் மறையவே மறையாது! 24 மணி நேரமும் பகல்தான்.

ஆர்ட்டிக் பகுதிகளில் மிகப் பெரிய ஆறுகளோ, ஏரிகளோ கிடையாது. ஏனெனில் கடலின் மேற்பகுதி, தண்ணீர் இருப்பதால் முழுவதும் உறையாது.

* அரோரா



மோகனா

குளிர்காலத்திலும் கூட ஆர்ட்டிக் பகுதிகளில் உயிர்களின் நடமாட்டம் உண்டு. பனிக்கரடி, பனி நரி, அணில், பனி ஓநாய், பெரிய கலைமான்கள், ரெயின்டீர், புனுகு எருது, சீல், வால்ரஸ், திமிங்கிலம், பெங்குவின்கள், பஃப்பின் பறவைகள், கொக்கு, வாத்து, பூச்சிகள், தேனீக்கள், வண்டுகள், குளவிகள், வெட்டுக்கிளி, சால்மன், சுறா என்ற மீன்வகைகள் என ஏராளமான விலங்குகள் துந்திர பிரதேசத்தின் சொத்துகள். இங்கே பனிப் பிரதேசத்துக்கே உரிய 400 அரிய வகை தாவரங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் புதர்ச் செடிகளும் பாசிகளும் காளான்களுமே! உயரமான மரங்கள் கிடையாது. பயிரிட்டு விவசாயம் செய்ய ஏதுவான நிலம் இல்லை.

வடதுருவ வெளியில் கணக்கிலடங்கா கனிமங்கள் உறைந்து கிடக்கின்றன. இங்கு வாழும் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு இனங்களாக உள்ளனர். ரஷ்யப் பகுதியில் மட்டும் 20 தேசிய இனங்கள் உள்ளன என்று தெரிகிறது. ஆனால் கிரேக்கர்களோ, கி.மு. 4-ம் நூற்றாண்டிலேயே ஆர்ட்டிக் பகுதி இருப்பதையும், அங்கு இனூட் இன மக்கள் மற்றும் அமெரிக்கர்கள் வாழ்வதாகவும் அறிந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் ஐரிஷ் மத போதகர்கள் துந்திர வெளிக்குப் பயணித்தனர். பின்னர் ஐஸ்லாந்தில் காலனியாதிக்கமும் காணப்பட்டது. 19-ம் நூற்றாண்டில்தான் வட துருவம் நோக்கி அமெரிக்கா அதிகார பூர்வமான பயணத்தை மேற்கொண்டது. 1909 ஏப்ரல் 6ம் நாள், ராபர்ட் எட்வின்ஸ் பியட்ரி என்ற அமெரிக்கர் நீண்ட முயற்சிக்குப் பின் நாய் வண்டியின் மூலம் வட துருவ மையத்தை எட்டிப் பிடித்தார். பின்னர், 1980களில் துந்திர பிரதேசம் பற்றி அறிய சர்வதேச ஆராய்ச்சி மையம், வடதுருவத்தில் துவங்கப்பட்டது.

'இனூட்' என்றால் 'உண்மையான மக்கள்' என்று பொருள்! 1977-ல் அலாஸ்கா பகுதியில் நடந்த துருவ மாநாட்டில் இனூட்கள், 'எஸ்கிமோக்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

ஆர்ட்டிக் பகுதி இனூட் மக்களின் சராசரி உயரமே 5 அடி 4 அங்குலம்தான். எஸ்கிமோக்களின் பாரம்பரிய பொருளாதாரம் கடல் வாழ் விலங்கினங்களை வேட்டையாடலும் மீன் பிடித்தலுமே! அவரவருக்குத் தனிப்பட்ட தொழில்களும் உள்ளன. ஆண்கள் வீடு கட்டுகின்றனர்;

யார் அந்தப் பிரபலம்?




கோரமான முறையில் கொலை செய்யப்பட்டவர்.

வேட்டையாடுகின்றனர்; மீன் பிடிக்கின்றனர். பெண்கள் சமைப்பதும், தோல் பதனிடுவதும், துணி நெய்யவும் செய்கின்றனர். விளையாட்டும், மீனும் பொதுச் சொத்தாக கணக்கிடப்படுகிறது. குழந்தைகளைக் குடும்பப் பொறுப்புடன் காப்பாற்ற வேண்டும் என்ற சமூக சட்டமும் கட்டுப்பாடும் உள்ளது.

இனூட் இன மக்கள் மீன், சீல், வால்ரஸ், திமிங்கிலம் இவற்றின் தோலை உடையாக, எலும்புகளை கட்டுமானப் பொருட்களாக, கொழுப்பை எரிபொருளாகவும், விளக்கெரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

எஸ்கிமோக்களின் வீடு 'இக்ளூ'. 'இக்ளூ' என்றாலே வீடு என்றுதான் பொருள். இரண்டு வகை வீடுகள் அமைக்கின்றனர். கோடையில் வால்ரஸ், சீலின் தோலின் மூலம் கூடாரம் அமைக்கின்றனர். குளிர்கால வீட்டை, கற்களையும் திமிங்கில எலும்புகளையும் அடுக்கி, அதன் மேலும், இடுக்குகளிலும் பாசியையும், புல் முளைத்த மண்ணையும் பூசி கெட்டிப்படுத்தி, உறுதியாக கட்டுகின்றனர். இந்த 'இக்ளூ'வின் நுழைவாசல் நீளமாகவும் மிகவும் குறுகியதாகவும் இருக்கும். இதனுள் நுழைவதற்கு ஒருவர் ஊர்ந்துதான் செல்ல முடியும். இக்ளூவில் மின்சார விளக்கைப் போட முடியாது. பனிக்கட்டி வீடு, உள்ளுக்குள் உள்ள வெப்பத்தை அப்படியே வெளியே விடாமல் அடை காக்கும். இதற்காகவே குறுகிய வாசல்!

துந்திர பிரதேசம் முழுவதும் பனிப்பாறைகளாய் உள்ளதால், சாலைப் போக்குவரத்து அவ்வளவாக கிடையாது. இருந்தாலும் ஓரிடத்திலிருந்து வேறு ஓர் இடம் போக; நாய் இழுக்கும் 'ஸ்லெட்ஜ்' வண்டியைப் பயன்படுத்துவார்கள். நீர்ப் பகுதிகளில் ஒருவர் மட்டும் உட்காரும் படகு பயன்படுத்தப்படும்.



"உங்க கடையில வாங்குன கொசு வலைக்குள்ளே எல்லாக் கொசுவும் வந்துடுதே?"

"அப்ப, கொசுவலைக்கு வெளியே போய்ப் படுத்துக்க வேண்டியதுதானே!"

– இ. சுஜிதா, ஆரணி

வடதுருவத்தின் அற்புதமான விஷயமே அங்கு காணப்படும் அரோராதான்! 'அரோரா' என்றால் கிரேக்க மொழியில் 'துருவ ஒளி' என்று பொருள்! வடதுருவப் பகுதியில் 60 அட்சரேகைக்கு மேல் 'அரோரா' உண்டாகிறது. அதி சக்தி மிக்க அணுத்துகள்களோடு மோதும் போது, கண்ணைப் பறிக்கும் வண்ண, வண்ண ஒளிக் கதிர்கள் ஏற்படுகின்றன. இவை கண்ணைக் கவரும் மஞ்சள், நீலம், சிவப்பு, வயலெட், வெள்ளை என பல வண்ணங்களில் வளி மண்டலத்தில் உருவாகின்றன!

புதையல் தீவு 11

குண்டர்களின் படகிலிருந்து பாலு குதித்த இடம் அத்தனையொன்றும்ஆழமானதல்ல. அதேசமயம், அலையடிக்கும் இடமும் அல்ல. சுமாராக நீந்தத் தெரிந்த ஒருவர் கொஞ்சம் கஷ்டப்பட்டு நீச்சலடித்தால் பக்கத்தில் சற்றுத் தொலைவில் இருந்த கட்டுமரத்தை நெருங்கி ஏறிவிட முடியும். ஆனால் பாலுவால் என்ன செய்து விட முடியும்? கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் எப்படியும் தப்பித்து விடுவோம் என்று ஒரு சின்ன துணிச்சலும் இருந்தது. நீச்சலில் தேர்ந்த டில்லிபாபு தன்னைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்து, அதோ நீந்தி வந்து கொண்டிருக்கிறான். எப்படியும் காப்பாற்றி விட மாட்டானா என்ன?

ஆனால் டில்லி அவனை நெருங்குவதற்குள் அவன் கடலின் அடியாழத்தைத் தொட்டுவிடுவான் போல இருந்தது. முதலில் எப்படி மூச்சு விடுவது என்று தெரியவில்லை. நீச்சலின் பாலபாடமே மூச்சை அடக்குவதுதான்! ஆனால் எத்தனை நேரம் அடக்குவது? எப்படி அடக்குவது? வாயைத் திறந்தால் உப்புநீர் உள்ளே போய்விடும். சனியன், இந்த நேரத்தில் அறிவியலெல்லாம் ஞாபகத்துக்கு வந்து தொலைக்கிறது. உள்ளே நீரைக் குடிக்கக் குடிக்க உடலின் கனம் அதிகமாகும். மேற்கொண்டு கையைக் காலையாட்ட முடியாமல் போய் இன்னும் மூழ்க வேண்டி வரும்.

அவனுக்கு முதல் முறையாக பயப்பீதி பிடித்துக் கொண்டது. தன்னால் முடிந்தவரை கால்களை வேக வேகமாக உதைத்துப் பார்த்தான். கைகளை முன்னும் பின்னும் அசைத்து நீரைக் கிழித்து மேலே வர முடியுமா என்று முயற்சி செய்தான். இந்த டில்லிக் கடங்காரன் இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறான்? இந்நேரம் பாய்ந்து

வந்து காப்பாற்றியிருக்க வேண்டாமா?

இவ்வாறு அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே தன் தலைமுடியைக் கொத்தாக யாரோ பிடிப்பது போல உணர்ந்தான். ஆ! டில்லி வந்துவிட்டான்! காக்கும் கடல் தேவதை அவந்தானா?

ஆனால் பாலுவால் கண்ணைத் திறந்து பார்க்க முடியவில்லை. தலை சுற்றி மயக்கத்தின் விளிம்புக்குப் போய்க் கொண்டிருந்தான். தன்னைக் கொத்தாகப் பிடித்த உருவம் அப்படியே இழுத்துக் கொண்டு மேலே போய்க் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவனால் உணர முடிந்தது. எப்படியும் பிழைத்...

அவ்வளவுதான். பாலுவுக்கு



பா.ராகவன்

முற்றிலுமாக நினைவு மறைந்து போனது. முழுமையான மயக்கத்துக்குத் தன்னைத் தந்தவனுக்கு அதன்பின் நடந்தது எதுவுமே தெரியவில்லை.

உண்மையில் பாலுவின் தலைமுடியைப் பற்றித் தூக்கியது டில்லி அல்ல. படகில் அவனை ஏற்றி வந்த குண்டர்களில் ஒருவன்தான். பாலு கடலில் குதித்ததுமே சுதாரித்துக் கொண்டு எழுந்து வந்து பார்த்த குண்டர்கள், தொலைவில் கட்டுமரத்தில் டில்லியும் குடுமிநாதனும் வருவதைப் பார்த்துவிட்டார்கள்.

''டேய், இவனுகளை வெறும் பொடிப்பையன்கள்னு நினைச்சி விட்டது தப்புடா. மூணு பேரையும் சேர்த்துப் பிடிச்சிட்டுப் போயிடணும். நம்ம நாட்டுக் கடல் எல்லை தாண்டினதும் என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்'' என்று அவர்களில் தலைவன் போலிருந்த பெருங்குண்டன் சொன்னான்.

அவன் சொன்னதை ஆமோதித்த இன்னொரு குட்டி குண்டன் உடனே தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி விட்டுக் கடலில் பாய்ந்தான். பாலுவை எப்படியாவது தூக்கி வந்துவிடுவதே அவன் நோக்கமாக இருந்தது. அதே சமயம், பாலுவைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் பாய்ந்து நீந்தி வந்துகொண்டிருந்த டில்லிபாபுவைக் குறிவைத்து இன்னொரு குண்டனும் நீரில் பாய்ந்தான்.

''அந்தக் கட்டுமரத்துல ஒருத்தன் இருக்கான் பாஸ்'' என்று இன்னொருவன் சுட்டிக் காட்ட, ''இருக்கட்டும், இருக்கட்டும்... ரன்னிங் ரேஸா ஓட முடியும் இங்க? இவனுகளைப் பிடிச்சிப் போட்டுட்டு அவனைப் போய் அள்ளிப்போம்'' என்றான் பெருங்குண்டன்.

இப்படியொரு விபரீதம் நேரலாம் என்று டில்லி எதிர்பார்க்கவில்லை. ஒருகணம் என்ன செய்வது என்றும் அவனுக்குப் புரியவில்லை. டில்லிக்கு நீச்சல் தெரியும். கண்டிப்பாக அவன் ஒருவனாகவே பாலுவை இழுத்துப் போய்க் காப்பாற்றி விட முடியும்.

யார் அந்தப் பிரபலம்?



இறந்த பிறகு இவருக்கு 'பாரத் ரத்னா' விருது வழங்கப்பட்டது.

ஆனால் தடி தடியாக குண்டர்கள் நடுக்கடலில் சண்டைக்கு வந்தால், பாவம் சின்னப் பையனால் என்ன செய்துவிட முடியும்? உடனே அவனுக்கு அழுகை வந்துவிட்டது. இத்தனை சிரமப்பட்டு புதையல் தீவின் ரகசியங்களை பாலு தனியொருவனாகக் கண்டுபிடித்திருக்கிறான். அந்த ரகசியம் என்னவென்று வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்த முடியாமலேயே போய்விடுமா? அட, வெளியுலகம் கிடக்கட்டும். பாலுவின் முயற்சிகளுக்குப் பக்கபலமாகக்கூட வந்த தங்கள் இருவருக்குமே கூடத் தெரியாமல் போய்விடுமா? கடவுளே, இதென்ன சோதனை!

ஒரு குண்டன் பாலுவைப் பிடித்து இழுத்து மேலே கொண்டு வந்துவிட்டான். இன்னொரு குண்டன் டில்லியை கோழி அமுக்குவது போல அமுக்கி இழுத்துக் கொண்டு வந்தான். இருவரையும் பந்துபோலச் சுருட்டித் தூக்கிப் படகில் போட்டுவிட்டு இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

''ம்... அந்தக் கட்டுமரத் தாண்ட போய்யா'' என்று குரல் கொடுத்தான் பெருங் குண்டன்.

கட்டுமரத்தைத் தள்ளத் தெரியாமல் தள்ளாடிக் கொண்டிருந்த குடுமி, நடந்த காட்சிகளை இருட்டில் அரைகுறையாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் ஏற்கெனவே பயந்து போயிருந்தான். அம்மா, அம்மா என்று அழவே ஆரம்பித்திருந்தான். பாலுவையும் டில்லியையும் குண்டர்கள் தூக்கிப் போய்விட்டால், நடுக்கடலில் தன் கதி என்ன என்கிற கவலை அவனுக்கு ஏற்பட்டது. 'குண்டர்களே! உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகும், என்னையும் அழைத்துக் கொண்டு போய் விடுங்களேன்' என்று கத்தலாமா என்று பார்த்தான்.

சே, எத்தனை அபத்தம்! இப்போது தான் செய்யக் கூடியது என்ன? நண்பர்கள் இருவரும் ஆபத்தில் இருக்கிறார்கள். தன்னால் ஏதாவது உதவ முடியுமா என்று பார்க்க வேண்டும். ம்ஹூம். வாய்ப்பில்லை. நடுக்கடல். நீச்சல் தெரியாத நிலைமை. எதிரி



''தம்பி, உனக்கு என்ன வேணும்?''

''எனக்கு ஒரு 'டிடெய்ல்' வேணும்.''

''இப்போ ஸ்டாக் இல்லே. அடுத்த வாரம் வா, தரேன்!''

- அனுராதா ராஜப்பா

ஓவியப் போட்டி

வீடுகள், தோட்டங்களில் கத்தரிச் செடியைப் பார்த்திருப்பீர்கள். வயலெட், வெள்ளை, இளம் பச்சை, வெள்ளையில் வயலெட் கோடு என பலவிதங்களில் அழகான இலை வடிவம் கொண்ட கத்தரிச் செடி தான் இந்த மாதத் தலைப்பு. உங்கள் கற்பனைக்கேற்றவாறு வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் 2 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



கடைசித்தேதி : **4.03.2005**

களோ, உருட்டுக்கட்டை பேர் வழிகள். தவிரவும் இருட்டு. என்னதான் செய்வது?

அவன் அதிகம் யோசிக்க வேண்டியிருக்கவில்லை. ஐந்து நிமிடங்களில் குண்டர்களின் படகு குடுமி இருந்த கட்டுமரத்தின் அருகே வந்து விட்டது.

''டேய், அந்தப் பொடியனைத் தூக்கிப் போடுங்கடா'' என்று ஒரு குரல் கேட்டது. படகிலிருந்து ஒரு கயிறை இறக்கினார்கள். வேறு வழியில்லாமல் குடுமி அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினான். படகின் விளிம்பை அவன் எட்டிப் பிடித்தபோது தலைமுடியைக் கொத்தாகப் பிடித்த ஒரு தடியன் அப்படியே தோசையைத் திருப்பிப் போடுவது போல அவனைத் தூக்கிப் படகில் போட்டான்.

''மூணுபேர்தானேடா? இன்னும் ஏதாவது சுண்டெலி இருக்கா?'' என்று எகத்தாளமாகக் கேட்டான் குண்டர் தலைவன். பாலுவுக்கு அப்போதுதான் லேசாக நினைவு திரும்பத் தொடங்கியிருந்தது. இருப்பினும் தொடர்ந்து மயக்கத்தில் இருப்பது போலவே நடிப்பது என்று முடிவு செய்து கொண்டான். ஏதாவது செய்ய வேண்டும். ஏதாவது செய்து தப்பித்தே ஆக வேண்டும். இவர்களது சட்டவிரோத, தேச விரோத நடவடிக்கைகளை உலகுக்குத் தெரியப்படுத்தியே ஆக வேண்டும். விடக் கூடாது என்று மனதில் வைராக்கியம் பூண்டான்.

ஆனால் குண்டனின் பேச்சு அவனுக்குக் கவலையளித்தது.

''டேய், இந்த மூணு பேரையும் சும்மா விடக் கூடாது. கரெக்டா நம்ம நாட்டுக் கடல் எல்லை தாண்டினதும் அஞ்சாம் திட்டு நெருங்கறப்ப இவனுகளைக் கடல்ல தள்ளிடுவோம். கண்டிப்பா இன்னிக்கு சுறாக்களுக்கு நல்ல விருந்துதான்'' என்று பி.எஸ்.வீரப்பா போல் சிரித்தான்.

ஆனால் விதி வேறு விதமாகச் சிரித்தது.

(அடுத்த இதழில் முடியும்)

இட்லிகா, தோசிகா!



இந்தியாவின் 'அரிசி' மிகவும் புகழ் வாய்ந்த, ஓர் உணவுப் பொருள். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் ஏதாவதொரு வகையில் அரிசி பயன்படுத்தப்படுகிறது.

5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் முன்னோர்களால் அரிசி உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்தியாவில் அரிசியின் ஆரம்பப் பெயர் 'தன்யா'



இந்து மதத்தில் அரிசியின் பங்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. கோயில்களில் இறைவனுக்குப் படைக்கவும், திருமணங்களில் தம்பதியினர் மீது மஞ்சள் கலந்து தூவி ஆசீர்வதிக்கவும் பயன்படுகிறது.

3000 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய ஆயுர்வேத மருத்துவரான 'சுஷ்ருதா' இந்தியாவில் புழக்கத்தில் இருந்த அரிசி வகையைக் கண்டறிந்து எழுதினார். இந்தோனேஷியாவில் அரிசி 'ஜாவா' என அழைக்கப்பட்டது. 'அரிசித் தீவு' என இதன் பொருள். இன்று கூட அரிசியை முறையாக



''கொசு கடிக்காம இருக்க, இந்தக் கிரீமைத் தடவணும்...''

''ஒவ்வொரு கொசுவா பிடிச்சு, எப்படி டாக்டர் தடவறது?''

- பி. பாரதி,
ஒன்பதாம் வகுப்பு,
அ.மெ.மே.நி.பள்ளி,
ஆரணி

சாதமாக சமைக்கத் தெரியாத இந்தோனேஷியப் பெண்களை எவரும் திருமணம் செய்து கொள்ள முன் வருவதில்லை.


பூர்வீக காலத்தில் ரோம் நாட்டில் (இத்தாலி) 'அவுரிசா' என அரிசி அழைக்கப்பட்டது. ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இந்தியர்கள்தான் அரிசியை எடுத்துச் சென்று அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். முக்கியமாக கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்தியர்களே அரிசியை அறிமுகப்படுத்தினர். அங்கிருந்து முகமதியர்கள் எடுத்துச் சென்று மேற்கு ஐரோப்பாவின் ஸ்பெயின் நாட்டில் அறிமுகம் செய்தனர். பின், தென் ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக இத்தாலியில் ஸ்பானிஷ்காரர்கள் அரிசியை அறிமுகப்படுத்தினர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் போர்த்துக்கீசிய நாடு, தென் அமெரிக்கா மற்றும் பிரேசிலில் அரிசி துருக்கி நாட்டுக்காரர்களால் அறிமுகம் ஆனது. தென் அமெரிக்காவிலிருந்து தான் இதர கண்டங்களுக்கு அரிசி அறிமுகம் ஆனது.


4000 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஆசியா மேய்ச்சல் நிலங்களில் வசித்து வந்த ஆரியர்கள் அரிசியைப் பார்த்ததே இல்லை. பார்லி ஒன்றே அவர்களின் பிரதான உணவு. நாளடைவில் ஆரியர்கள் அரிசியைப் பற்றி அறிந்து பாலுடன் சேர்த்துச் சமைத்து உண்ண ஆரம்பித்தனர். 'ஷீரா' என்று இந்த உணவுக்குப் பெயர்.

இன்று இந்தியாவில் அனைவராலும் மிகவும் விரும்பிச் சாப்பிடப்பட்டு வரும் இட்லியும் தோசையும் கி.பி. 920ல் கன்னடப் புத்தகம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுப் பிறகு 'இடாரிகா', தோசரிகா' என அவை தயாரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. நாளடைவில் 'தோசரிகா' தோசை ஆனது.

நாம் விரும்பிச் சாப்பிடும் இட்லியும் தோசையும் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தோன்றிய உணவுகள்!

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்:

1. தமிழ்க் கடவுள் (4)

6. நாசியைக் கொண்டு உணருவது (3)

13. பாரதிக்கு இது என்றால் கசக்கும் (4)

வலமிருந்து இடம்:

4. இதன் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது (4)

7. உலகம் (2)

9. பிரணவ மந்திரம் (2)

10. அந்தக் கால வீரர்களிடம் இது இருக்கும். (2)

11. பாரதத்தின் ஜீவ நதி (3)

16. அவசரத்திற்குப் பெயர் போனது இதன் கொட்டை (4)

மேலிருந்து கீழ்:

1. டாக்டர் பட்டம் என்பதைத் தமிழில் இப்படி கூறுவர் (4)

2. ஆரியர்கள் கைபர் ________ வழியாக இந்தியாவினுள் வந்தார்கள் (4)

3. அறுசுவைகளுள் ஒன்று (4)

4. தவித்த வாய்க்குத் ________ தர வேண்டும் (4)

5. படை என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

கீழிருந்து மேல்:

8. பூட்டுடன் இணைந்தே இருக்கும் (2)

9. கூரை வேயப் பயன்படுவது (2)

12. நட்பின் எதிர்ப்பதம் (2)

13. இது கட்டிய புற்றில் பாம்பு வசிக்கும் (4)

14. யானைக்கு இது அழகாக இருக்கும் (4)

15. சந்திரன் அல்லது மாதம் (4)

16. மரங்களில் ஒன்று; குச்சி போல் காய் காய்க்கும் (3)

- கோ. செந்தமிழ்ச் செல்வி,
காஞ்சிபுரம்

விடை: 75ம் பக்கம்

ஊஞ்சல் கிளிகள்!

ஏகாந்தபுர மன்னர் வினோதர். அவரிடம் எல்லா நற்குணங்களும் இருந்தன. ஒரு கெட்ட குணமும் இருந்தது. அவருக்கே அது கெட்ட குணம் என்று தெரிந்தாலும் அவரால் மாற்றிக் கொள்ள முடியவில்லை! அப்படி என்ன குணம் என்கிறீர்களா?

அபூர்வமான பொருள்களைச் சேகரிப்பது! காசு கொடுத்து வாங்கி, அன்பளிப்பாகக் கிடைப்பதைச் சேகரித்தால் தப்பில்லை! ஆனால் திருடியாவது சேகரிக்க வேண்டுமென்று நினைப்பது குற்றமல்லவா!

மந்திரி விசித்திரர் இந்த விஷயத்தில் ராஜாவுக்கு ஆதரவாயிருந்தார். ஒருமுறை மன்னரும் மந்திரியும் வேட்டையாடிக் களைத்து ஒரு முனிவரின் ஆசிரமத்துக்கு இளைப்பாற வந்தார்கள். ரிஷி அவர்களுக்குப் பாலும் பழங்களும் கொடுத்து உபசரித்தார்.

முனிவரின் பேரன் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்காக பல நாள் சிரமப்பட்டு அழகிய வெள்ளிக் கிளிகள் செய்து கொடுத்திருந்தார் ரிஷி. அந்தக் கிளிகள் ஒரு குட்டி ஊஞ்சலில் வட்டமாக அமர்ந்திருந்தன. அதன் வேலைப்பாடு வேந்தன் மனதைக் கவர்ந்தது.

''உங்கள் பேரனா?''என்றபடி குழந்தையின் அருகில்



மாலதி

சென்ற மன்னர் அதை லாகவமாக எடுத்து மந்திரியிடம் கொடுக்க மந்திரி அதை மடியில் மறைத்துக் கொண்டார்.

ஆனால் இதை முனிவர் பார்த்து விட்டார்.

நாடே சொந்தமாயிருக்கிற ராஜா ஒரு குழந்தையின் விளையாட்டுச் சாமானைத் திருடுவதா? பேரன் எழுந்தால் பிடிவாதம் பிடித்து அழுவானே என்கிற கவலை ஒரு பக்கம்.

'மன்னரைத் 'திருடன்' என்று சொன்னால் தண்டனை கிடைக்கும். அதோடு மக்கள் அரசரை மதிக்க மாட்டார்கள். நல்ல அரசரை நாடு இழக்க நான் காரணமாகக் கூடாது' இப்படியெல்லாம் யோசித்தார் முனிவர்.

அதே சமயம் மன்னர் முனிவர் குடிலுக்கு வந்த விஷயம் தெரிந்து காட்டுவாசிகள் அவரைக் காண வந்தனர். அனைவரிடமும் அன்போடு நலம் விசாரித்தார் அரசர். அப்போது ரிஷி ''ரொம்ப நாளா வித்தை செய்து காண்பியுங்க என்று கேட்டுக் கொண்டிருந்தீர்களே! இன்றைக்கு நமது மதிப்பிற்குரிய மன்னரும் அமைச்சரும் காண சில வித்தைகள் செய்து காண்பிக்கிறேன்'' என்றவர் ஓர் ஓலையைக் குடுவையாக்கி அதில் நீரை ஊற்றினார். நீர் துளியும் சிந்தாததோடு ஓலையைப் பிரித்ததும் நீர் காணாமல் போயி



The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2005

K. Rajendran
Publisher

ருந்தது.

அடுத்து மணலைக் கையிலெடுத்து ஏதோ முணுமுணுத்துக் கையைப் பிரித்தார். மணல் சர்க்கரையாகி இருந்தது. பலத்த கைதட்டல்.

பூனையைப் பிடித்து கூடையைப் போட்டு மூடி மந்திரம் சொல்லித் திறந்தால் முயல் துள்ளிக் குதித்து ஓடியது! மன்னரும் மந்திரியும் மெய்மறந்து வித்தைகளில் லயித்திருந்தனர்.

"அன்பர்களே, மன்னர் வேட்டையாட வந்தவர். என் பேரனுக்கு வெகுமதி எதுவும் கொண்டுவரவில்லையே என்ற வேதனை அவர் கண்களில் தெரிகிறது" என்றவர்,

"ஓம், ஹ்ரீம், ஹ்ரோம் கார்த்த வீர்யார் ஜுனாய ஹூம்!" என்று சில மந்திரங்களை உரக்க உச்சரித்தார். பிறகு,

"மாகாளி! மந்திரியோட மடியிலே ஒரு அற்புத கிளி பொம்மையைக் கொண்டு வந்து போடு" என்றார்.

ஜனங்கள் ஆவலோடு மந்திரியின் மடியைப் பார்க்க வேறு வழியில்லாமல் ஊஞ்சல் கிளிகளை வெளியில் எடுத்தார் அமைச்சர்.

இதற்குள் முனிவரின் பேரன் எழுந்து விட அவன் கையில் பொம்மையைக் கொடுத்து அரசர் விடை பெற்றுக் கொண்டார்.

அன்றிலிருந்து திருடும் பழக்கத்தை அரசர் விட்டு விட்டார். மானத்தைக் காப்பாற்றிய ரிஷிக்கு மனமார நன்றி சொன்னார். முனிவரின் சாதுர்யத்தை எண்ணி வியந்தார் அமைச்சர்.



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032**

பிங்பாங் பந்து எதில் செய்யப்படுகிறது?

பிங்பாங் பந்துகள் செல்லுலாய்ட் என்ற பொருளிலிருந்து செய்யப்படுகின்றன. செல்லுலாய்ட் என்பது செல்லுலோஸ்



நைட்ரேட்டும் கற்பூரமும் இணைந்த பொருளாகும். அதனால்தான் பிங்பாங் பந்துகளை முகரும் போது அவற்றில் கற்பூர வாசனையை உணர முடிகிறது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்


மீன் கொத்திகள் ஒரு நாளைக்கு 7 மீன்களுக்கு மேல் பிடித்துச் சாப்பிடாது. எட்டாவது மீனைப் பிடித்தாலும் அதைத் தண்ணீருக்குள் போட்டு விடும்.

பாக்டீரியாக்களில் 2000 வகை உண்டு. ஒரு துளிப் பாலில் பத்துக் கோடி பாக்டீரியாக்கள் உள்ளன.

- ச. அழகுவேல், கள்ளிவாடி

கடல் குதிரையின் முகம் குதிரையைப் போல் இருக்கும். நிமிர்ந்து நின்று நீந்திச் செல்லும். இது அதன் முதுகின் மீது உள்ள சிறிய தோல் துடுப்பைக் கொண்டு நீந்துகிறது. ஆண் கடல் குதிரையின் உடலில் சிறிய தோல்பை ஒன்று இருக்கும். பெண் கடல் குதிரை இந்தப் பைக்குள் முட்டையிடும். முட்டைகளில் இருந்து பிறந்த குஞ்சுகள் பைக்குள்ளேயே வளரும். பிறகே இரை தேட வெளியே வரும். இவை வெப்ப மண்டலக் கடல்களில் காணப்படுகின்றன.

- மா. அழகுராஜன், இராஜபாளையம்





காகிதத்தில் துளையிடுங் கருவியை (Paper Punch) கி.பி.1893ம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த சார்லஸ் பி.புருக்ஸ் என்பவர் கண்டுபிடித்தார்.

- இரா.சு.பிரகாசம், திருச்சி

பெண் எலும்புக் கூட்டின் மண்டை ஓடு கரடு முரடாக இல்லாமல் ஓரளவு மென்மையாகத்தான் தெரியும். பெண் எலும்புக் கூட்டின் இடுப்பு எலும்புகள் சற்று வட்ட வடிவமாக இருக்கும். உடல் எலும்புக் கூட்டையும் மண்டை ஓட்டையும் ஒப்பிடுகையில், பெண் மண்டை ஓடு சற்று சிறியதாகத் தெரியும். கை எலும்புகளும் கால் எலும்புகளும் கனம் குறைவாக இருக்கும். சுருக்கமாகச் சொல்வதானால், ஓர் ஆண் எலும்புக் கூட்டையும் பெண் எலும்புக் கூட்டையும் அருகருகே நிறுத்தி வைத்துப் பார்த்தால் வித்தியாசம் தெரியும்.

- ப. கந்தசாமி,
திருச்செங்கோடு

கடல் காக்கைகள் மிக வேகமாகப் பறக்கக் கூடிய பறவைகள். ஒரு மணி நேரத்திற்கு 50 மைல் பறக்கும். ஒரே நாளில் 700 மைல்கள் கூட பறக்கும். இவை, திசை அறிவிக்கும் பறவைகள் என்பது மாலுமிகளின் நம்பிக்கை.

- இரா.பாலு,
வரக்கால்பட்டு

சூரிய வெப்பத்தை 'போலோமீட்டர்' என்னும் கருவியால் அளக்கிறார்கள்.



'**கு**ளோனிங்' முறையைக் கண்டுபிடித்தவர் ஸ்டீன் விலான்ட்சென்..

தாய்வான் நாட்டில் கரப்பான்பூச்சி செல்லப்




பிராணியாக வளர்க்கப்படுகிறது.

- வி.ஆர். கிருஷ்ணன்,
தஞ்சை

கி.பி. 1492ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தாலும், கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கழிந்த பின்னரே, உலகிற்குத் தெரிய வந்தது. கொலம்பஸ் பயணம் செய்த கப்பலுக்கு ஏற்பாடு செய்த ஸ்பெயின் இளவரசி இஸபெல்லாவுக்கு முதன் முதலாக அமெரிக்காவைக் கண்டுபிடித்த செய்தி அறிவிக்கப்பட்டது. அவருக்கு அந்தச் செய்தி கிடைக்க ஐந்து மாதங்கள் ஆயின!

- அ. அப்துல் காதர்,
தூத்துக்குடி



ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ், இத்தாலியன் மற்றும் ரோமோனிய மொழிகள் லத்தீன் மொழியிலிருந்து தோன்றியவை. இவற்றை நானூறு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பேசுகிறார்கள்.

- ஆர். திவ்யா,
ஆரணி

மயில்கள் அடைகாக்கும் போது பல பெண் மயில்கள் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் 25 அல்லது 30 முட்டைகள் இட்டு, அவற்றை தங்களுக்குள் மாற்றி மாற்றி அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றன.

- க. காயத்ரி
இராணிப்பேட்டை

உராங்குட்டான் என்னும் குரங்கு வகை இந்தோனேசியாவில் மட்டுமே காணப்படுகிறது.

ஹார்ன்பில் என்ற பறவையில் பெண் பறவை முட்டையிட்டவுடன், தனது மலத்தினால் சுவர் எழுப்பி சிறை வைத்து விடும் ஆண்.

- ச. ஜெயஸ்ரீ,
எட்டாம் வகுப்பு,
எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, மதுரை

புதிர் உலகம் விடைகள்



II 10 ஏணிப்படிகள் தான் தெரியும். கடல் அலை பொங்கும் போது படகும் அதே உயரத்திற்கு எழும்பும்.

III முதல் காரில் 3 ஆண்கள்,
நடு காரில் 11 குழந்தைகள்
கடைசி காரில் 8 பெண்கள்

IV

2	100	5
25	10	4
20	1	50

V இரண்டு மகள்களுக்கும் கிடைத்திருக்கின்ற பணம் 300 ரூபாய். இதை வைத்துப் பார்த்தால் 2 தாய் 2 மகள் என்ற 4 பேர் கணக்கில் வர மாட்டார்கள். இந்தப் புதிரில் 3 பேர் மட்டுமே வருகிறார்கள். அதாவது பாட்டி, மகள், பேத்தி. முதல் நபர் (பாட்டி) தன் மகளான 2-ம் நபருக்கு (மகள்) 300 ரூபாய் தருகிறார். அதைப் பெற்றுக் கொண்ட 2-ம் நபர் (இப்போது இவர் தாய்) தனது மகளான 3-ம் நபருக்கு தன்னிடம் உள்ள 300 ரூபாயிலிருந்து 200 ரூபாயைத் தருகிறார். இப்போது 2ம் நபரிடம் இருக்கும் பணம் 100 ரூபாய். 3ம் நபரிடம் இருக்கும் பணம் 200 ரூபாய். மொத்தம் 300 ரூபாய்.

VI 1. பெங்களூர்
2. பெல்ஜியம்
3. பெத்லஹேம்

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 மு	ரு	2 க	ன்		ம்	3 க	ங்	4 த
னை		ண		5 சே		ச		ண்
வ		6 வா	ச	னை		ப்		ணீ
ர்		ய்			வி	7 பு		ர்
			லை		8 சா			
ன்		ம்	9 ஒ			ள்	10 வா	
யா		த		கை	ங்	11 க		லா
ரை		ந்		12 ப		ங்		ல்
13 க	ணி	14 த	ம்		15 ரி	தி	ந்	16 மு

ரேவதி ஆன்ட்டி டைம்ஸ்

அன்புக் குழந்தைகளே!

கதை சொன்னால் கேட்பீர்கள் என்றுதான் நல்ல 'வைட்டமின் ஏ' கதையோடு உங்களைச் சந்தித்தேன். கதை பிடித்ததா? இந்த மாதம் கவிதை.

சிறுவன்: மழை தரும் மரங்களை மனச்சாட்சியில்லாமே மாஞ்சு மாஞ்சு வெட்டுவதேன் மாமனே?

மாமன்: அந்த மரத்தைத் தங்கள் வீட்டுப் பிள்ளையென்றெண்ணாத மனிதர் பெருத்ததால் மணியப்பா.

சிறுமி: கோயிலில் சாமியாய்க் கும்பிட்டுப் பெண்களைக் கொடுமைப்படுத்துவதேன் மாமியே?

மாமி: அந்தக் கோயில் சாமி போலக் கையிலே சூலத்தைப் பெண்கள் ஏந்தாததால் பொன்னம்மா!

சிறுவன்: இல்லாத பேர் பலர் இருக்கின்ற பேர் சிலர் என்கிற நிலைமை ஏன் மாமனே?

மாமன்: இல்லாத பேருக்கு இருப்பவன் தரவேணும் என்ற எண்ணம் வராததால் மணியப்பா!

சிறுமி: எல்லோரும் ஓர் இனம் என்றே முழங்கி வந்த சொல்லும் பொய்யாச்சு ஏன் மாமியே?

மாமி: சொல்லும் சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றெண்ணும் மக்களால் பொன்னம்மா!

சிறுவன்: காட்டில் மிருகங்கள் கூட்டாக வாழ்கையில் நாட்டில் பகைமை ஏன் மாமனே?

நாட்டில்

மாமன்: அந்தக் காட்டு மிருகங்கள் ஏய்ச்சு வாழ்வதில்லை, மனிதன் விலங்கானான் மணியப்பா.

சிறுமி: பொய் சொல்லலாகாது என்றே சொல்கின்றவர் பொய்மையாய் வாழ்வதேன் மாமியே?

மாமி: சொன்ன சொல்லின் படி வாழ்ந்து காட்டுகிற மனிதர் குறைந்து விட்டார் பொன்னம்மா.

நிறையப் பேருக்கு சிறப்பு 'ழ' வரவே வராது இல்லையா? கீழே உள்ள நான்கு வரிகளைத் தினமும் 5 முறை சொல்லிப் பயிற்சி எடுத்தால் போதும். நீங்களும் அழகாக 'ழ' பயிற்சியை அடுத்தவர்களுக்குக் கொடுக்கலாம்.

ஒரு வாழைத் தோட்டத்திலே மூவுழக்கு ஆழாக்கு நெல்லுக்கு ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்தி ஏழு அழுகல் வாழைப் பழம்!


பகைமை ஏன்?
pillai

காவல் காத்த அரசன்!

உபசரிப்பு!

அண்ணா முதல்வரான பிறகு காஞ்சிபுரம் வீட்டுக்கு வந்திருந்த போது, தன்னுடன் வந்திருந்த சில அதிகாரிகளுக்குத் தண்ணீர்



* கோகலே



* நெப்போலியன்

வழங்குமாறு சொன்னார். உடனே ஃப்ரிட்ஜில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தார்கள். அதைக் கவனித்து விட்ட அண்ணா, வீட்டினுள் சென்று ''இது எப்படி வந்தது?'' எனக் கேட்டார். அதற்கு வீட்டில் உள்ளவர்கள், ''நீங்கள் இப்போது பெரிய பதவிக்கு வந்து விட்டீர்கள். உங்களோடு அரசு அதிகாரிகள் இங்கே வருவார்கள். அவர்களுக்கு எல்லாம் ஐஸ் வாட்டர் தந்து உபசரிக்க வேண்டாமா? அதனால் தான் வாங்கினோம்'' என்றார்கள். அண்ணா லேசாகச் சிரித்தபடி ''உபசரிப்பது என்பது முடியாத ஒன்றைச் செய்து மகிழ்விப்பதல்ல. நம்மிடம் எது இருக்கிறதோ அதை மனம் உவந்து தருவதுதான் உபசரிப்பு. எனவே இது போன்ற ஆடம்பரங்களை நாம் இனி விரும்ப வேண்டாம்'' என்றார்.


- ப. கந்தசாமி,
திருச்செங்கோடு

உயர்ந்த பதவி!

''என் கணவர், மாமனார், என் அண்ணன், என் உறவினர்கள் பலரும் படையில் சேர்ந்து பணி புரிந்திருக்கின்றனர். எனவே, என் மகனுக்கு படையில் உயர்ந்த பதவியைத் தர வேண்டும்'' என்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனிடம் கேட்டாள் ஒரு தாய். அதற்கு ஆபிரகாம் லிங்கன், ''அம்மா, உங்கள் குடும்பம்

நாட்டிற்காகத் தேவைக்கு மேல் உழைத்திருக்கிறது. எனவே இனிமேல் மற்றவர்களுக்கு வாய்ப்புத் தருவதுதான் முறை" என்றார்!

- அகிலாதேவி,
பத்தாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை மையம், தர்மராஜபுரம்,
பரமக்குடி



* அண்ணா

அடுத்த வகுப்பில் முதல் நாள் நடத்தாமல் விட்ட கப்பல் பாடத்தை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கமாக நடத்தினார்.

- சு. கண்ணகி,
மிட்டூர்

நல்ல ஆசிரியர்!

கோபாலகிருஷ்ண 'கோகலே பள்ளி ஆசிரியராக இருந்தார். ஒரு நாள் கப்பலைப் பற்றிய பாடத்தை நடத்த வேண்டியிருந்தது. அந்தப் பாடத்தில் கப்பலைப் பற்றி எழுதியிருந்த சில விவரங்கள் அவருக்குப் புரியவில்லை.


'இந்தக் கப்பல் பாடத்தை பிறகு படிக்கலாம்' என்று ஒத்தி வைத்துவிட்டு, அன்று வேறு பாடம் நடத்தினார். மறுநாள், அருகில் இருந்த துறைமுகத்துக்குப் போய் ஒரு கப்பலில் ஏறி அதன் கேப்டன் மூலமாக கப்பலைப் பற்றிய அனைத்து விவரங்களையும் நேரில் கண்டு கேட்டுத் தெரிந்து கொண்டார் கோகலே.

காவல்!

மன்னரும், மாவீரருமாகிய நெப்போலியன் ஒரு நாள் இரவு தன் அரண்மனையில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது அவர், காவல் காக்கும் பணியில் இருந்த வீரன் ஒருவன் தூங்கி வழிந்து கொண்டிருப்பதைக் கண்டார். காவல் பணியின்போது தூங்குவது மிகப் பெரிய குற்றமாகும். ஆனால் நெப்போலியன் தூங்கிக் கொண்டிருந்த அவனை எழுப்பவில்லை. அதற்கு மாறாக அவனுடைய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அன்றிரவு முழுக்க அரண்மனையைக் காவல் காக்கும் பணியில் தானே ஈடுபட்டார்!

- ஆர். பிரசன்னா,
கரூர்

* லிங்கன்





✉ பெயர் என்ன? ஆனந்தியின் ஜோக்கும் நகைச்சுவை துணுக்குகளும் கலக்கலோ கலக்கல்! நகைச்சுவை இளவரசி அட்டைப் படம், அட்டைப்படக் கட்டுரை நன்று.

- நெ. பிரஜோற்பத்திகலை,
ஏழாம் வகுப்பு,
மங்களம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
புவனகிரி

கோகுலம்... கோலாகலம்!

✉ பிப்ரவரி இதழ் உள்ளம் மகிழும் வண்ணம், நாங்கள் புகழும் வண்ணம் அமைந்திருந்தது புதுசு கண்ணா! புதுசு!

- ரா. பாரதி, ரா.மது, ரா. ஹரிபிரசாத், மாடம்பாக்கம்

✉ பள்ளியில் பாடம் நடத்துவது போல் தெள்ளத் தெளிவாக, எளிமையாக அமைந்திருந்தது பட்ஜெட் என்றால் என்ன? கட்டுரை. பட்ஜெட் என்ற பெயர் வந்தது எப்படி? பணவீக்கம் என்றால் என்ன? போன்றவற்றுடன் பட்ஜெட் எப்படி தயாரிக்கிறார்கள் என்பதையும் எங்களுக்குப் புரியும்படி கூறிய பேராசிரியர் நாகநாதனுக்கும் கோகுலத்துக்கும் நன்றி!

- வரதராஜன், திருவாரூர்

✉ 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது', கோகுலம் அளவில் சிறுத்தாலும், அதன் சுவை மட்டும் சிறிதளவும் குறையவில்லை! கரங்களில் அடக்கமாய் வைத்துப் படிப்பதற்கு சௌகரியமாய் இருக்கிறது.

- எம். சேக் அப்துல்லா, சென்னை



✉ கோகுலத்தின் இந்தப் புதிய வடிவமைப்பு நாங்கள் எதிர்பாராதது. பிறந்த நாள் இதழ் மிகவும் சூப்பராக இருந்தது. வாங்கி வரும்போது கோகுலம், படித்து முடிக்கும்போது கோலாகலம்!

- எம்.வினோத், சங்கரன்கோவில்

கணபதிபுரம் ஏ.வி.டி மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்

ஸ்பெஷல்

காமராஜர் பாராட்டிய பள்ளி!

கணபதிபுரத்தில் 1947ம் ஆண்டு இந்தப் பள்ளி தொடங்கப்பட்டு, அன்ன விநாயகர் தேவஸ்தான நிர்வாகத்தால் சீரும் சிறப்புமாக சிறந்த முறையில் நிர்வகிக்கப் பட்டு வருகிறது. முதலில் நடு நிலைப் பள்ளியாக இருந்த பள்ளி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியாக வளர்ந்து தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் ஓட்டுநர் பள்ளியாகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

உயர்நிலைப் பள்ளித் தேர்வில் விவசாயம் மற்றும் மின்சாரப் பிரிவுகளில் மாநிலத்தில் பலமுறை முதல் பள்ளியாக வந்துள்ளது. பல முறை பள்ளி இறுதி வகுப்பில் மாவட்டத்திலேயே 100 சதவீதம் தேர்வு பெற்று முதலாக வந்துள்ளது. முன்னாள் முதல்வர் காமராஜர் வந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டியிருக்கிறார்.



* தலைமை ஆசிரியை







* முதல்வர் * செயலர்(ITI) * செயலர்

ஏஷியாட் விளையாட்டில் கபடிப் பிரிவில் அர்ஜுனா அவார்ட் பெற்ற இராஜரத்தினம் இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவர்.

இங்கு படித்த பல மாணவர்கள் இன்று அமெரிக்காவிலும், கனடாவிலும் சிறந்த விஞ்ஞானிகளாகவும் பொறியாளர்களாகவும் இருந்து, இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்க்கிறார்கள். வெறும் வகுப்பறையோடு பாடத்தை முடித்து விடாமல் மாணவர்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிய

வைக்கிறோம்.

தற்போது நடந்த சுனாமி ஆழி அலை தாக்குதலின் போது, இப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சமூகப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஜெயகுமாரி, செயலர் பி. சிவதாணு, தொழிற்பயிற்சி நிர்வாகி கனகசபாபதி, தொழிற்பயிற்சி முதல்வர் கோலப்ப பிள்ளை மற்றும் பள்ளி குழு உறுப்பினர்களின் வழிகாட்டுதலினால் மிகச் சிறப்பாக கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

செல்லப் பிராணிகள்

அமெரிக்காவில் 65% வீடுகளில் செல்லப் பிராணிகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றில் நாய்களின் எண்ணிக்கை மட்டும் 780



லட்சம்!

- கே. பி. நாதன், எட்டாம் வகுப்பு, 'அ' பிரிவு

விடுகதைக்கு விடை என்ன?

1. அரச மரத்திற்குப் பன்னிரண்டு கிளை, கிளை ஒவ்வொன்றிற்கும் முப்பது இலைகள் - அவை என்ன?

2. உலகிலேயே பெரிய பந்தல் - அது என்ன?

3. பச்சை ராணி சிரித்தால் முத்து உதிரும் - அது என்ன?

விடைகள். 1. ஒரு வருடம், 12 மாதம், 1 மாதத்திற்கு 30 நாட்கள்
2. வானம்
3. வெண்டைக்காய்

- அ. ஸ்ரீராம், பத்தாம் வகுப்பு, 'அ' பிரிவு

யார் நீ?

இந்துவா?
முஸ்லீமா?
கிறிஸ்தவனா?
யாராலும் அடையாளம்
காண முடியவில்லை
சுனாமியில் சிக்கிய
குழந்தையை!

- அ. அனுஷியா, பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு





எச்சரிக்கை!

நஞ்சைக்கூட
நயமாகப் பேசி
அமுதென்று
ஊட்டி விடும்
உலகம் இது.
ஏறு, நான்
இருக்கிறேன்
என்று ஏறும்போது
ஏணியை எட்டி உதைக்கும்
உலகம் இது.
நண்பா, எத்தர்களிடம்
எப்போதும்
விழிப்புணர்வுடன் இரு.
இல்லையேல்
காணாமல் போவாய்!

- கு. சுமா,
எட்டாம் வகுப்பு 'இ'
பிரிவு

கடல்

பொறுமைக்கு
உதாரணம் நீ
என்று சொன்னார்கள்
இன்று உதாரணத்தைப்
பொய்யாக்கி விட்டாயே!

- ஆர். திவ்யா,
ஏழாம் வகுப்பு 'அ' பிரிவு

ஏழைகளின் தலைவர்


'பாம்பின் கால் பாம்பறியும்' என்பர். ஏழைகளின் துன்பம் ஏழைகளுக்கே புலனாகும். காமராசர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். காட்சிக்கு எளிமையும் கடுஞ்சொல் இன்மையும் அவரது பண்புகள். அவரது பெரிய கதராடை அவரது பரந்த மனப்பான்மையையும், உள்ளத் தூய்மையையும் புலப்படுத்தும். அவர் எதிலும் அவசரப்படாதவர். சிந்தனைச் சிற்பி. செயல் வீரர்.

- வி. சுஜிதேவி,
ஏழாம் வகுப்பு 'இ' பிரிவு

ஆர். தேவி ஷின்யா,
பத்தாம் வகுப்பு,



ஜி. சுரேஷ்,
ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவு










எஸ். ஜெயராம்,
ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவு



என். ஜெயராம்,
ஆறாம் வகுப்பு



சு. சுகிதா,
எட்டாம் வகுப்பு



டி. பொன்நிஷா,
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு



பி. குகன்,
எட்டாம் வகுப்பு
'ஆ' பிரிவு



ப. சுஜிதேவி,
ஏழாம் வகுப்பு 'இ' பிரிவு



வி. அகிலா,
பத்தாம்
வகுப்பு 'அ'
பிரிவு

ஜி. உஷா,
பத்தாம் வகுப்பு
'இ' பிரிவு →



அ. ஆஸ்மி, ஆறாம்
வகுப்பு 'அ' பிரிவு



பி. பிரபாகரன்,
ஏழாம் வகுப்பு 'இ' பிரிவு



மார்ச், ஏப்ரல் மாதங்கள் வந்தாலே அது மாணவர்களுக்கு திக் திக் திக் மாதங்களாக அமைந்து விடுகிறது. முழு ஆண்டுப் பரீட்சை, ஓயாத படிப்பு, நாள் முழுவதும் அதைப் பற்றியே நினைப்பு, படபடப்பு... என்று எக்ஸாம் ஃபீவரில் சிக்கித் தவிக்கும் மாணவர்களுக்கு சரியான டிப்ஸும் வழிகாட்டுதலையும் கூடுதலாக தங்களது அனுபவங்களையும் தருகிறார்கள் இவர்கள்.




அதிக மார்க் வாங்குவது எப்படி?

ரமேஷ் பிரபா: (கல்வி ஆலோசகர்)

பள்ளி, கல்லூரி, வேலைக்கான தேர்வுகள் என்று பல்வேறு விதமான தேர்வுகளை ஒருவர் சந்திக்க நேரிட்டாலும்கூட, குறிப்பாக பொதுத்தேர்வுகள் என்றால் அதிக அளவில் பயப்படுகிறார்கள். பொதுத் தேர்வு என்பது இன்னொரு தேர்வு அவ்வளவு தான்!

• ரமேஷ் பிரபா



தேர்வு சமயத்தில் தூக்க விஷயங்களில் சற்று மாறுதல் தேவை. தேர்வு நாட்களில் இரவு, அதிகாலை என்று இரண்டு நேரங்களிலுமே படிக்க வேண்டியது அவசியம் என்பதால் அதைச் சரியான விகிதத்தில் செய்ய வேண்டும். இரவு எவ்வளவு நேரம் படித்தாலும் கூட தேர்வு தினத்தன்று காலையில் எழுந்து ஒருமுறை ரிவிஷன் செய்து பார்த்துக் கொண்டால் தான் நமக்கு ஞாபகம் பசுமையாக இருக்கும்.

கடந்த சில ஆண்டுகளில் பொதுத்தேர்வில் கேட்கப்பட்ட வினாத்தாள்களை வைத்துக் கொண்டு இந்த வருடம் இந்தக்

கேள்வி வரும், இது கண்டிப்பாக வராது என்று ஒரு சில பாடங்களை மட்டும் படிப்பது நல்ல நடைமுறை அல்ல.

தேர்வுக்கு அரைமணி நேரத்துக்கு முன்பு அது வரும், இது வரும் என்று நண்பர்கள் கூறுவதைக் கேட்டு, கடைசி அரை மணி நேரத்தில் அவசர அவசரமாகப் புரட்டிப் பார்த்து படிக்க முயற்சி செய்யாதீர்கள். இது மேலும் படபடப்பை அதிகரிக்கும்.


* மாலா

தேர்வுக்கு முந்தைய தினங்களில் முடிந்தவரை படித்தவற்றையெல்லாம் பார்க்காமல் எழுதிப் பார்ப்பது அவசியம். இதன்மூலம் உங்களது ஞாபக சக்தியைத் தெரிந்துகொண்டு தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்.

முக்கியமான பகுதிகளை அடிக்கோடிட்டுக் காண்பிப்பதில் தவறில்லை. ஆனால் அந்தப் பதிலில் எது முக்கியமான பகுதி என்று முடிவு செய்து அந்தச் சில கருத்துகளையோ, வரிகளையோ மட்டும் அடிக்கோடிட்டால் போதும்.

தவிர, தேர்வு முடிந்தவுடன் அன்றைய தேர்வு பற்றி ரொம்பவும் ஆராய்ந்து நேரத்தை வீணடிப்பதை விட்டுவிட்டு மறுநாள் தேர்வுக்குப் படிக்கத் தொடங்குவதே புத்திசாலித்தனம்.

பி.எஸ். ஷாகுல் ஹமீது (+1 மாணவர்)

நான் பத்தாவது மெட்ரிக் தேர்வில் 1100க்கு 1043 மார்க் வாங்கி என் பள்ளியில் முதல் மாணவனாக வந்தேன். என் வெற்றிக்குக் காரணமாக நான் சொல்வது, தேர்வுக்கு முன் எனது தேர்வுத்தாள்களை வைத்து என் தவறுகளைத் தெரிந்து கொண்டதுதான்! உதாரணமாக, பொதுத்தேர்வுக்கு முன்பு நான் கணக்கில் சென்டம் வாங்கியதே கிடையாது. 'அப்ஜக்டிவ்' எனப்படும் ஒரு மார்க் கேள்விகளில்தான் கோட்டை விடுகிறேன் என்று தெரிந்து அதில் நான் கூடுதல் கவனம் செலுத்த, பொதுத் தேர்வில் கணக்கோடு சேர்த்து இயற்பியல், வேதியியலிலும் நூற்றுக்கு நூறு வாங்கினேன்.

ஹெலன் ஆண்டிபஸ் (ஆசிரியை - சியோன் மெட்ரிக் பள்ளி)

நாங்கள் படிக்கும் காலத்தில் படிப்பும் தேர்வுகளும் ஒரு ஜாலியான விஷயமாக இருந்தன. ஆனால் இன்று கடுமையான போட்டிகளுக்கிடையில்

தேர்வுகள் என்பது மாணவர்களுக்கு ஒரு சோதனையாகவும் சவாலாகவும் அமைந்து விடுகிறது. முதலில் ஒரு மாணவனுக்குத் தேர்வு மீதான பயத்தைப் போக்க வேண்டும். இதனால்தான் எங்கள் பள்ளியில் அடிக்கடி தேர்வுகளும், பொதுத் தேர்வு நடைமுறையிலான பின்பற்றல்களும் இருப்பதால் இறுதித் தேர்வு என்று மாணவர்களுக்கு இன்னொரு தேர்வு தானே என்று சுலபமாகி விடுகிறது. பள்ளியில் ஒரு மார்க்,



* ஹெலன் ஆண்டிபஸ்

இரண்டு மார்க் கேள்விகளுக்கும் தனித்தனியே தேர்வுகள் வைத்தால் சுலபமாக மார்க்குகள் வாங்க இதுபோன்ற பயிற்சிகள் பெரிதும் கை கொடுக்கும்.

மாலா: (பெற்றோர்)

என் பெண் சுகன்யா இப்



* ஷாகுல் ஹமீது

பொழுது +2 படிக்கிறாள். எப்பொழுதெல்லாம் தேர்வுகள் நடக்கிறதோ அப்பொழுது எங்களுக்கும் அவளுக்குரிய படபடப்பும் அக்கறையும் வந்து விடும். இரவு கண் விழித்துப் படிக்கும்போது சூடான பானம் கொடுத்து உற்சாகம் கொடுப்பதோடு அவளுக்கு ஆதரவாக நாமும் கண் விழித்திருந்தால் அது அவளுக்குப் பக்க பலமாக இருக்கும். என் மகளின் படிப்பை பாதிக்குமே என்று எங்கள் வீட்டில் கேபிள் கனெக்ஷனையும் கட் செய்து விட்டோம். தன் படிப்புக்கு, முன்னேற்றத்துக்குதானே இத்தனை தியாகம் செய்கிறார்கள் என்கிற நினைப்பே ஒவ்வொரு மாணவனையும் படிப்பு, தேர்வுகள் மீது கூடுதல் அக்கறையைச் செலுத்தி வெற்றிக் கனிகளைப் பறித்துத் தரும்.

- ச.ந. கண்ணன்

படங்கள்: பப்பி

நீண்ட காலத்துக்கு முன்பு நாய், பூனை, எலி மூன்றும் ஒன்றுக்கொன்று மிக ஒற்றுமையாக இருந்தன. ஒரு சமயம் நாய் எங்கோ வெளியூர் போக வேண்டியிருந்தது. அதனால் தன்னிடமிருந்த சில முக்கியமான டாக்குமெண்ட்டுகளை ''நான் வரும்வரை உன்னிடம் ஜாக்கிரதையாக இருக்கட்டும். வேறு யாரிடமும் கொடுக்காதே!'' என்று சொல்லிவிட்டு வெளியூர் சென்றது.

டாக்குமெண்ட்களைக் காப்பது பூனைக்குக் கஷ்டமாக இருந்தது. ஏனெனில் அது பாலைத் திருடிக் குடிப்பதற்காக அடிக்கடி வெளியே செல்ல வேண்டியிருந்தது. அதனால் தன் நண்பன் எலியைக் கூப்பிட்டு ''இந்த டாக்குமெண்ட்கள் நம் நண்பன் நாய்க்குச் சொந்தமானவை. அவற்றை நீ எனக்காக ஜாக்கிரதையாக வைத்திரு. நாய் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் கொடுத்துவிடலாம்'' என்றது. சரியென்று எலி அந்த டாக்குமெண்ட்களை வாங்கி தன் பொந்தில் பத்திரமாக வைத்தது.

குளிர்காலம் வந்தது. ஆனால் நாய் இன்னும் ஊரிலிருந்து திரும்பவில்லை. நல்ல குளிராக இருந்ததால் எலியால் ஓடியாடி சாப்பாடு தேட முடியவில்லை.

எதிரி!





ஒருநாள் அதற்குப் பசி தாங்கவில்லை. தன் கையில் இருந்த டாக்குமெண்ட் பேப்பர்களில் சிறிது தின்று பார்த்தது. அவை மிகவும் ருசியாக இருக்கவே அனைத்து பேப்பர்களையும் தின்றுவிட்டது. தின்ன முடியாத துண்டுகளை மட்டும் விட்டு விட்டது.

ஊரிலிருந்து நாய் திரும்பி வந்து பூனையைப் பார்த்து, ''என் டாக்குமெண்டுகளைத் திருப்பிக் கொடு'' என்று கேட்டது.

அதற்குப் பூனை ''கவலைப் படாதே! பத்திரமாக வைத்திருக்கும்படி நம் நண்பன் எலியிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். போய் வாங்கிக் கொண்டு வரலாம்'' என்றது. இரண்டும் எலியைத் தேடிக் கொண்டு அதன் பொந்தருகில் சென்றன.

ஆனால் அங்கு டாக்மெண்ட்கள் துண்டு துண்டாக கிடப்பதைக் கண்டதும் பூனைக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அது எலியைத் துரத்த ஆரம்பித்தது. ''உன்னிடம் கொடுத்த டாக்குமெண்ட்களை நீ எப்படி எலியிடம் கொடுப்பாய்?'' என்று நாய் பூனையைத் துரத்த ஆரம்பித்தது. அன்றிலிருந்து எலியைக் கண்டால் பூனை துரத்துகிறது; பூனையைக் கண்டால் நாய் துரத்துகிறது!

- மு. வெங்கடேசன்,
பத்தாம் வகுப்பு,
சிறிய மலர்
மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு



ஜனவரி இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். சரியான விடையளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சரியான விடை!

1. ஜெருசலம்
2. ஹீப்ரு, அராபிக்
3. டெல் அவிவ், ஹைஃபா
4. சேகல்
5. பெத்லஹேம்
6. இஸ்ரேல்

பரிசு பெற்றவர்கள்:

1. பி. புஷ்பவள்ளி, செங்கல்பட்டு
2. எஸ். சுந்தர், வேதாரண்யம்
3. எம். காயத்ரி, நெய்வேலி
4. கோவி ரிஷ்ய சீரங், திருச்செங்கோடு
5. தே. ஜெனிபர் சில்வியா, மதுரை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

விளையாட்டு அரங்கம்

பட்டம் வென்றார் சஃபின்!

அமெரிக்காவின் லிண்ட்சே டேவன் போர்ட் - செரீனா வில்லியம்ஸ் இருவரும் ஆஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் மோதினர். முதல் செட்டில் செரீனா தோல்வியைத் தழுவினார். ஆனால் அடுத்தடுத்த செட்களில் வீறு கொண்டு எழுந்து 6-3, 6-0 என்ற கணக்கில் முதல் நிலை வீராங்கனையான டேவன் போர்ட்டை தோல்வியடையச் செய்தார் செரீனா. 2003 ஆம் ஆண்டு இதே பட்டத்தை செரீனா வென்றார். 2003 ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்துக்குப் பின் வேறு எந்தப் பட்டத்தையும் அவர் வெல்லவில்லை. காயம் காரணமாக 18 மாதங்கள் முக்கிய போட்டிகளில் பங்கேற்காமல் இருந்தார். இந்த ஆஸ்திரேலிய ஓபன் செரீனாவுக்கு ஏழாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

உலக தர வரிசையில் முதல் இடத்திலிருந்து ஏழாவது இடத்துக்கு வந்த செரீனா இந்தப் பட்டம் மூலம் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறார். லின்ட்சே டேவன்போர்ட்டுடன் 15 போட்டிகளில் செரீனா விளையாடி 11 போட்டிகளில் வென்றுள்ளார். உங்களுக்காக செரீனா போஸ்டர் 48, 49 ஆம் பக்கங்களில்.

ஆஸ்திரேலியாவின் லேடன் ஹூவிட், ரஷ்யாவின் மாரட் சஃபின் இறுதி ஆஸ்திரேலிய ஓபன் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் மோதினர். 1-6, 6-3, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் ஹூவிட்டை மாரட் சஃபின் தோற்கடித்தார். 25 வயதாகும் சஃபின் முதல் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றிருக்கிறார். 2002, 2004 ஆம் ஆண்டுகளில் இறுதிப் போட்டி வரை அவர் சென்றிருக்கிறார்.



* சஃபின்

வங்கதேசம் சாதனை!

வங்கதேச கிரிக்கெட் அணி முதன்முதலாக ஒரு தின கிரிக்கெட் தொடரைக் கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது. ஜிம்பாப்வே அணிக்கு எதிராக டாக்காவில் நடைபெற்ற ஐந்தாவது மற்றும் கடைசிப் போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது வங்கதேசம். 5 ஆட்டங்கள் கொண்ட இந்தப் போட்டியில் 3-2 என்ற கணக்கில் வங்கதேச அணி தொடரைக் கைப்பற்றியது. அணியின் கேப்டன் ஹபிபுல் பசார் அற்புதமாக ஆடி வெற்றியைத் தேடித் தந்துள்ளார்.

* செரீனா

கொட்டும் அருவி!



பிப்ரவரி இதழில் 'அருவி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். பரிசு பெற்ற அருவிகள் இங்கே...

முதல் பரிசு
ஸ்ரீவித்யா,
ஒன்பதாம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்



இரண்டாம் பரிசு
பா. சிவசங்கர், ஐந்தாம் வகுப்பு,
புனித அன்னாள்
மேல்நிலைப் பள்ளி,
சென்னை




மூன்றாம் பரிசு
ஆர். சூரிய நாராயணன்,
ஒன்பதாம் வகுப்பு,
மதுரை

ஆறுதல் பரிசு
கு. தாமரைச் செல்வி எட்டாம் வகுப்பு,
அமலோற்பவம் மே.நி.பள்ளி, புதுவை



ஆறுதல் பரிசு
எஸ். வர்ஷா, ஐந்தாம் வகுப்பு,
பி.எஸ்.மே.நி.பள்ளி,
சென்னை



அன்புள்ள ஜக்கு...

மாவு புளிப்பது ஏன்?



● ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

விவேக் ஓபராய் போன்று நம் தமிழ் ஹீரோக்கள், பெரிய அரசியல் தலைவர்கள், கிரிக்கெட் வீரர்கள் என ஒவ்வொருவரும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்தால் சுவர்க்க பூமி ஆகி விடாதா ஜக்கு?

பணம் இருந்தால் மட்டும் போதாது; அதைச் செலவு செய்ய நல்ல மனமும் இருந்தால்தான் விவேக் ஓபராய் போல் முன்னுதாரணமாகத் திகழ முடியும் ஜோதி.



● ஹம்மிங் பேர்ட்



● விவேக் ஓபராய்

● ஆர். அம்பிகா, மதுரை

? இடது உள்ளங்கை அரித்தால் செலவு; வலது உள்ளங்கை அரித்தால் வரவு என்று சொல்கிறார்களே, உண்மையா ஜக்கு?

எனக்கு உள்ளங்கை அரித்தால் சோப்பு அலர்ஜி என்று அர்த்தம். உங்களுக்கு இப்படி ஓர் எண்ணமா? அடிக்கடி வலது உள்ளங்கை அரித்தால் எல்லோருக்கும் சந்தோஷம்தான்! வல, இட உள்ளங்கைகள் அரிக்கும்போது யதேச்சையாக வரவு, செலவுகள் நிகழ்ந்திருக்கலாம்! இதற்கெல்

லாம் அறிவியல் ஆதாரம் இல்லை அம்பிகா.

● ச.ய. சுதாகர்,
மாதேசம்பாளையம்

? விளையாட்டு என்பது போட்டியா? பொழுது போக்கா ஜக்கு?

வீரர்களுக்கு விளையாட்டு என்பது போட்டி. பார்க்கிற ரசிகர்களுக்கு அது பொழுது போக்கு. நீங்கள் போட்டியாளரா, பொழுதுபோக்குபவரா சுதாகர்...?

● எஸ். திலகவதி,
வில்லியனூர்.

? உலகில் மிகவும் சிறிய பறவை கிவியா, ஹம்மிங் பேர்டா? என் சந்தேகத்தைத் தீர்த்து வை ஜக்கு.

உலகில் மிகவும் சிறிய பறவை சந்தேகமில்லாமல் ஹம்மிங் பேர்ட்தான் திலகவதி!

● ந. லலித்குமார்,
மாதேசம்பாளையம்

? கோகுலத்தில் எங்கள் படைப்புகள் அதிகமாக இடம் பெறுவதற்கு, நாங்கள் என்ன செய்ய வேண்டும் ஜக்கு?

ஒரு ஜோக்கோ, துணுக்கோ அனுப்பிவிட்டு அது வரவில்லை என்று கவலைப்படக் கூடாது. புதிர், கதை, விடுகதை, ஜோக்ஸ், துணுக்கு என நிறையப் படைப்புகளைத் தொடர்ந்து அனுப்பி வைக்க வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்து வெளியிட இயலும். நீங்கள் உங்கள் நண்பர்களை நிறைய எழுதச் செய்து கோகுலத்தில் பங்கேற்றால் கோகுலம் சுழல் கோப்பை போட்டியில் இறங்கலாம்!

● வி. சுதர்சன், நல்லூர்

? எங்கள் அம்மா மாவு அரைத்து வைத்திருந்தார். அது மறுநாள் பொங்கி வழிந்திருந்தது. ஏன் ஜக்கு?

இதற்கு காரணம் பாக்டீரியாக்கள்தான். பாக்டீரியாவால் தான் மாவு புளிக்கிறது. அந்த நேரம் கார்பன்டையாக்சைடு மாவில் நிறைந்திருப்பதால் சிறு சிறு கொப்புளங்கள் ஏற்பட்டு, மாவு உப்புகிறது. இது அதிகமாகும்போது மாவு வெளியே வழிகிறது. கரண்டியால் கிளறினால் மாவு பழைய அளவுக்குக் குறைந்து விடும் சுதர்சன்.

இவர்தான் அந்தப் பிரபலம்!



ராஜீவ்காந்தி

- ஜி.எஸ்.எஸ்

நிறைய கடிதங்கள் வந்து குவிந்ததால் அன்புடன் மேலும் சில கடிதங்கள்...

மகுடம் சூடிய கோகுலம் !



✉ 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பார்கள். எங்கள் அபிமான கோகுலம் வடிவமைப்பில் சிறிதாயினும் உள்ளடக்கம் உலகளவியது.

- பிரபாலிங்கேஷ்,
மேலகிருஷ்ணன்புதூர்

✉ வடிவம் மாறினாலும் தரத்திலும் சுவையிலும் அன்று போல் காட்சியளிக்கிறது. புதிய பகுதிகள் புதுமையாக இருந்தன.

- எம்.எம். ரேகா,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
நல்லூர்

✉ கோகுலத்தின் வடிவமைப்புதான் மாறி இருக்கிறதே தவிர, அதன் துடிப்பிலோ, உயிர்ப்பிலோ, சுவையிலோ எந்தவிதமான மாற்றமும் இல்லை. கையடக்க கோகுலம் கனக்கச்சிதமாக எல்லாவித அம்சங்களையும் தாங்கியுள்ளது.

- எஸ். கண்ணன்,
நெய்வேலி

✉ படிக்க பக்கம் கூடியது; கையில் பிடிக்க வடிவம் மாறியது; பார்க்க வண்ணம் கூடியது; கருத்தில் மாறா கோகுலம் மற்றோர் மகுடம் சூடியது!

- எஸ். கவிதா, திருநெல்வேலி

✉ கோகுலம் இதழில் வெளி வரும் கதைகள் அனைத்தும் அசத்தலாக உள்ளது. ஜோக்கைப் படித்து வயிறு குலுங்கச் சிரித்தோம். கோகுலம் என் போன்ற வாசகர்களுக்கு பொற்குவியல்!

- நெ.பிரஜோற்பத்திகலை,
புவனகிரி

✉ அதே விலையில் அதிகப் பக்கங்கள் பயன்மிகு வண்ணக் கோலங்களாய், புதிய கோகுலமாய், கனக்கச்சித வடிவமாய், புத்துணர்ச்சியூட்டும் புதிய பகுதிகளாய் 23 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கும் உனக்கு எங்களது இதயங் கனிந்த நல்வாழ்த்துகள்!

-மு. ரேவதி,
மு. மஞ்சுளா,
அ.ம. உ.நி. பள்ளி,
மணல்மேடு.

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





1. பாம்பின் கண், 2. தந்தத்தில் குருவி, 3. மானின் வால், 4. குரங்கின் வால், 5. எலியின் வால்,
6. முயலின் பல், 7. யானையின் கால் நகங்கள், 8. பாம்பின் வால், 9. மானின் புள்ளிகள், 10. முயலின் காது

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka